RANI STORES
NO. 165 WELIKADA
RAJAGIRIYA.

விலை சதம் 5

"சுதந்திரன்"
விளம்பர விபரங்கள்
சுதந்திரனில் ஒப்பந்தத்தின் பேரில் விளம்பரம் செய்ய விரும்புகிறவர்களும், அவசரகால அறிவித்தல்களுக்கு விரும்புகிறவர்களும் எழுதுங்கள்.
மானேஜர்,
"சுதந்திரன்"
194 A. தட்டாரத் தெரு. கொழும்பு.

Telegrams: 'SUTANTIRAN' COLOMBO
ஒன்றுபட்டால் உண்டு வாழ்வு

# சுதந்திரன்
# THE "SUTANTIRAN."

(A TAMIL DAILY OF THE TAMIL SPEAKING PEOPLE.)
REGISTERED AS A NEWSPAPER AT THE G. P. O.

இலங்கையினதும் இலங்கைவாழ் தமிழ்ப் பேசும் மக்களதும் சுதந்திரத்திற்காக வெளிவரவது.

பக்கங்கள் 4

"சுதந்திரன்"
(தினப் பதிப்பு)
சந்தா விபரம்

| | | |
|---|---|---|
| தனிப் பிரதி | சதம் | 5 |
| 3 மாதச் சந்தா | ரூ. | 6-00 |
| 6 மாதச் சந்தா | " | 12-00 |
| 1 வருடச் சந்தா | " | 24-00 |

மானேஜர்,
"சுதந்திரன்"
194 A. தட்டாரத்தெரு. கொழும்பு.

Phone: 3411
நாமார்க்கும் குடியல்லோம்

புதுக்கால் | கொழும்பு, சர்வஜித்து வரு ஐப்பசி மீ 10உ திங்கட்கிழமை — Colombo, October, 27 1947 — வரஷம் 1566 துல ஸுஸ்ரீ பிறை 12 | இதழ் 46

# 'இந்தியத் துவேஷமா? இதற்கு பதில் சொல்லும்'

## சிங்கள கொடியே இலங்கையின் தேசியக் கொடியாம்!

### "மற்றக் கொடியைப் பறக்கவிட்டால் என் பட்டாளங்களைக்கொண்டு பிடுங்கி எறிவேன்"

### கொழும்பு நகரசபை மண்டபத்திலே திரு குணசிங்கா கொக்கரிப்பு

கொழும்பு, அக். 26

**தொழில் மந்திரியின் காரியதரிசியாகிய திரு. ஏ. ஈ. குணசிங்கா நேற்று மாலையில் கொழும்பு நகரசபை மண்டபத்தில், லங்காஜாதிக சம்மேளன மண்டலத்தின் ஆதரவில் நடைபெற்ற பொதுக் கூட்டத்தில் பேசியபோது: "சிங்களவர் கொடியாகிய சிங்கக் கொடியல்லாது, வேறு எந்தக் கொடியும் பராளுமன்றக் கட்டிடத்தில் உயர்த்தப்பட்டால் நான் எனது பெரும் பட்டாளங்களைக் கொண்டு சென்று அதைப் பிடுங்கி எறிவேன்" என்று சபதங் கூறினார்.**

தொடர்ந்து திரு குணசிங்கா கூறியதாவது:— "சிங்கள மக்களின் ஆதிக் கொடியாக சிங்கக் கொடியில் ஏதாவது மாற்றங்கள் செய்தால் நாம் அவற்றை எதிர்ப்போம்." "சிங்கக் கொடியே பாராளுமன்றத்தில் உயர்த்தப் படவேண்டும்."

பழைய கல்வி மந்திரியாகிய டாக்டர் டி. பி. ஜயதிலகா சொன்னதாவது:-

"2358 வருடங்களாக இலங்கை சுதந்திரத்துடன் பிறருக்கு அடிமைப்படாமல் இருந்து வருகிறது. அக்காலங்களில் சிங்கக் கொடியே இலங்கையின் தேசியக் கொடியாக உபயோகிக்கப்பட்டு வந்தது.

யாழ்ப்பாணத்தில் கூட சிங்கக் கொடிதான் உயர்த்தப்பட்டிருந்தது என்பதற்கு என்னிடம் அத்தாட்சிகள் உண்டு. 'செப்புயல் குமாரன்' என்னும் சிங்கள அரசிளங் குமாரன் வடமாகாணத்தில் சிங்கக் கொடியை உயர்த்தினான் என்பது "சலலீஹினி சாநதேசய" என்னும் சிங்களக் காவியத்தில் கூறப்பட்டிருக்கிறது.

"சென்ற 1815-ம் ஆண்டு மார்ச்சு மாதம் 2-ந் தேதி எங்கள் தேசியக் கொடியாகிய சிங்கக் கொடி இங்கிலாந்திற்கு ஆங்கிலேயரால் எடுத்துச் செல்லப்பட்டது. இப்பொழுது எமக்கு சுதந்திரமுமல்லாமல் எங்கள் தேசியக் கொடியும் கிடைக்க வேணடும்.

"எம் இளம் வாலிபர்களே! தேசியக் கொடியாகிய சிங்கக் கொடியை உயர்த்துவதற்காக உங்கள் உயிரையும் விட நீங்கள் தயாராக இருக்க வேண்டும்." என்று தருகன்னங்கரா கூறி முடித்தார்.

திரு ஜே. ஏ. வில். பெரேரா சொன்னதாவது:— "1815 ம் ஆண்டு மார்ச்சு மாதம் 2-ந் தேதி கண்டியில் எங்கள் சிங்கக் கொடி தாழ்த்தப்பட்டது. இலங்கைக்கு இது அவமானத்தைக் கொடுத்துள்ளது. அதே கண்டியில் தான் நாம் சிங்கக் கொடியை ஏற்ற வேண்டும். ஏற்றினால் தான் எம் இழந்த மரியாதையை நாம் பெற முடியும். தொடர்ந்து திரு. வில் பெரேரா கூறியதாவது:— "கிழக்கு நாட்டு மக்கள் ஒரு அரசை ஏற்படுத்த இப்பொழுது விரும்புகிறார்கள். வட இந்தியாவில் ஆரிய அரசன் ஒருவனை நாமும் எம் முறைக்கு ஏற்ப நாம் பெற முயற்சிக்க வேண்டும்."

இப் பேச்சை திரு பெரேரா சொன்னதும் கூட்டத்தில் கலவரம் உண்டாகியது.

அப்பொழுது திரு. பெரேரா தாம் சொன்னது விஜயராஜனைப் போன்ற ஒரு அரசனைச் சிங்கள மக்கள் இப்பொழுது பெற்றுக்கொள்ள வேண்டுமென்ற கருத்தில் தான் என விளக்கினார்

சுதந்தர இலங்கையின் கொடி பராதன லங்காவின் சிங்கக் கொடியாகவே இருக்கவேண்டுமென்று ஒரு தீர்மானம் ஏகமனதாக நிறைவேற்றப்பட்டது.

முதலியார் என். விக்ரமரத்ன திரு. டி. பி தென்னக்கோன், வேறு பலரும் பேசினார்கள்.

கூட்டத்திற்கு ஏராளமான சிங்கள மக்கள் சமுகமளித்திருந்தனர்.

டாக்டர் கன்னங்கரா தலைமை வகித்தார்

## லண்டனில் ஸர். ராதாகிருஷ்ணன்

### இந்திய ஹை கமிஷனர் விருந்தளித்தார்

லண்டன், அக். 26

காசி சர்வகலாசாலை உதவி அதியடசகர் ஸர். எஸ். ராதாகிருஷ்ணனுக்கு இந்திய ஹை கமிஷனர் திரு. வி கே கிருஷ்ண மேனன் லண்டனில் உள்ள வால்டோர்ப் ஹோட்டலில் ஓ விருந்தளித்தார் (ராய்ட்டர்)

## எகிப்துக்கு 5000 ராத்தல் மருந்து வகை

நியூயார்க், அக். 26

எகிப்தில் காலரா நோய் பரவுவதைத் தடுக்க இங்கிருந்து 5000 ராத்தல் நிறையுள்ள மருந்து வகைகள் விமானத்தில் நேற்று அனுப்பப்படடுள்ளதாக அறிவிக்கபடுகிறது.

(ராய்ட்டர்)

## சில்லி நாடெங்கும் வேலை நிறுத்தங்கள்

### அந்நிய நாட்டினர் பலர் கைது

### கமியூனிஸ்டுகள் தூண்டுதலாம்

சான்டியாகோ, அக். 25

தென்னமெரிக்க குடியரசு நாடான சில்லியெங்கும் வேலை நிறுத்தங்கள் பரவிவருகின்றன. கமியூனிஸ்டுகளின் தூண்டுதலால் இவை நடைபெறுவதாக சில்லி சர்க்கார் குற்றஞ்சாட்டுகிறார்கள். இது சம்பந்தமாக சில்லி சர்க்கார் நேற்றிரவு சாண்டியாகோ, வல்பாராஸியோ முதலிய இடங்களில சோதனை செய்து ரஷியர், யூகோஸ்லவியர், ஸ்பானியர் முதலிய பல அந்நிய நாட்டினரைக் கைது செய்தனர். இக்க அந்நிய நாட்டினர் சில்லியிலிருந்து வெளியேற்றப்படுவர். வட பகுதியிலுள்ள நைட்ரேட் சுரங்கங்களையுடைய டிராபர்கா, அன்டபகாஸ்டா ஆகிய இரு மாகாணங்களும் அபாயகரமானவையென்று அறிவிக்கப்பட்டுள்ளது. அன்ட பகாஸ்டா மாகாணத்தில் மட்டும் 150 பேர்கள் கைதியாயினர் சான்டியாகோவிலிருந்து 63 மைல் தூரத்திலுள்ள டாம்பரச் சுரங்கத்தில் 1800 தொழிலாளர் வேலை நிறுத்தம் செய்கிறார்கள். ரயில் வேலைகளிலும் ஆஸ்பத்திரிகளிலும் நடைபெற விருந்த வேலை நிறுத்தங்கள் தடுக்கப்பட்டன. இதற்கு முன் சில்லி நிலக்கரி சுரங்கங்களில் கமியூனிஸ்டுகள் தூண்டுதலால் வேலை நிறுத்தங்கள் ஏற்பட்டதன் காரணமாக சில்லி சர்க்கார் ரஷியாவின் உறவை ரத்து செய்து யூகோஸ்லாவியரை வெளியேற்றியது.

(ராய்ட்டர்)

## கலாச்சார நிதி பெழுங்க வேண்டும்

### அரசாங்கத்துக்கு தாகூர் சங்கத்தின் கோரிக்கை

கொழும்பு, அக். 25

சமீபத்தில் நடைபெற்ற தாகூர் சங்க வருடாந்தரப் பொதுக் கூட்டத்தில், இலங்கையில் கலாச்சாரத்தை அபிவிருத்தி செய்ய ஸ்தாபிக்கப்பட்டுள்ள ஸ்தாபனங்களுக்கு பண உதவி செய்ய அரசாங்கம் கலாச்சார நிதி ஏற்படுத்த வேண்டும் என்ற ஓர் தீர்மானம் நிறைவேற்றியது. பார்லிமெண்ட் கூட்டத்தில் இது சம்பந்தமாக கோரிக்கை சமர்ப்பிக்கப்பட்டு நிதி ஒதுக்கப்படுமென்று தெரிய வருகிறது. வருட முடிவில் சங்கத் தலைவர் பதவியிலிருந்து விலகும் டாக்டர் பாலேந்திரா பேசியபோது, தாகூர் சங்கம் தாகூரின் "தபால் கந்தோர்" என்ற நூலை சிங்களத்தில் மொழி பெயர்த்து வெளியிட்டிருப்பதாகவும் அது நாடகரூபகமாக நடிக்கப்பட்டதென்றும் அதையும் மற்றுமுள்ள தாகூர் நூல்களையும் தமிழிலும் சிங்களத்திலும் மொழிபெயர்க்க உத்தேசித்திருப்பதாகவும் தெரிவித்தார்.

## தென்னாப்பிரிக்கப் பிரதிநிதி திணறடிக்கப்பட்டார்

### இரு புறங்களிலுமிருந்து இடி

### 'இந்தியர் ஒதுக்கப்படல், வாக்குரிமை பறிமுதல், பகிஷ்காரம்'

## "இதெல்லாம் உண்மைதானா? இதுதான் ஜனநாயகமா?"

### ஐக்கிய தேச அரசியல் கமிட்டியில் ரஷியா, உக்ரைன் பிரதிநிதிகளின் சரமாரியான கேள்விகள்

நியூயார்க், அக். 26

இன்று ஐக்கியதேச அரசியல் கமிட்டிக் கூட்டத்தில் இரண்டு போர்களுக்கு மத்தியில் அகப்படடுக் கொண்டு திணறினார் அவருக்கு ஒரு புறம் உக்ரைன் பிரதிநிதி டிமிட்ரி மானுய்லிஸ்கியும் மறறொரு புறத்தில ரஷியப் பிரதிநிதி வஷின்ஸ்கியும் உட்கார்ந்து கொண்டு அவரை வெட்கித் தலைகுனியும் படியாக சரமாரியான கேள்விகளைக் கேட்டுத் திணறடித்தார்கள்.

தென்னாப்பிரிக்காவில் இந்தியர்கள் மீது வெள்ளையர்கள் அக்கிரமான நடவடிக்கைகள் எடுத்து வருவதைக் கண்டித்து உக்ரைன் பிரதிநிதியும் ரஷிய பிரதிநிதியும் தென்னாப்பிரிக்க பிரதிநிதிமீது பாணங்களைத் தொடுத்தார்கள். பூற்பகலில் உக்ரைன தென்னாப்பிரிக்காவைத் தாக்கியது. பிற்பகலில் ரஷியா தென்னாப்பிரிக்காவைத் தாக்கியது. ஆகவே நாள் முழுவதும் தென்னாப்பிரிக்க பிரதிநிதி இந்த இரு பிரதிநிதிகள மத்தியில அகபபடடுத் திண்டாடினார்.

ரஷியப் பிரதிநிதி வஷின் ஸ்கி தென்னாப்பிரிக்கப் பிரதிநிதி ஹாரி லாரன்ஸை நோக்கிக் கேடட கேள்விகளாவன:-

(1) ஒரு நிமிடநேரம் நாம் தென்னாப்பிரிக்காவை நோக்குவோம் ஐயா, தென்னாப்பிரிக்கப் பிரதிநிதியாரே! இக்கேள்விகளுக்குப் பதில் சொல்லும். உங்கள் தென்னாப்பிரிக்காவில் இந்தியர்களுக்கு சேரிகளை ஒதுக்கி வைத்தருக்கிறீர்களா?

(2) ஆரஞ்சு பிரீஸ்டேட்டில இந்தியர்களுக்குச் சொந்தமாற நிலங்கள இருககப்படாதெனறும் அங்கு அவர்கள் குடியேறுவதாகாதெனறும் தடை செய்திருக்கிறீர்களா?

(3) தென்னாப்பிரிக்காவில் இந்தியர்களின் வாக்குரிமையைக் கட்டுப படுத்தியும் அநேக இந்தியர்களின் வாக்குரிமைகளைப் பறிமுதல் செய்துமிருக்கிறீர்களா?

(4) இந்திய வர்த்தகர்களை ஐரோப்பியர்கள் பகிஷ்கரிக்கிறார்களாமே! அப்படி பகிஷ்காரக்காத ஐரோப்பியர்கள் கண்டதுண்டமாக்கப்படடுவர் என்று பயமுறுத்தப் படுகிறார்களாமே!

(5) நெட்டாலில் முனிசிபல் சபைப் பிரதிநிதித்துவம் இந்தியர்களுக்குக் கிடையாது அவர்கள் உரிமை பறிக்கப்படடிருக்கிறதாமே! இது வாஸ்தவந்தானா? தென்னாப்பிரிக்கா ஒரு ஜனநாயக நாடு என்று நீர் மனோராஜ்யம் செய்து கொண்டிருக்கிறீர் போலும் நிலைமைகளைக் கவனித்தால நான் அப்படி நினைக்க முடியவில்லையே!

## இலங்கையில் விட்லி கவுன்ஸில்கள்

### ஏற்படுத்த திரு. டேயின் அறிக்கை

கொழும்பு, அக். 26

இலங்கை அரசாங்க ஊழியர்களுக்குத் தொழிற் சங்க உரிமை வழங்குவது சம்பந்தமாக அரசாங்கத்தால பிரிட்டனிலிருந்து வரவழைக்கப்பட்ட விட்லி நிபுணர் திரு. ஏ, ஜே. ரி டே அவர்களின் அறிக்கை சனிக்கிழமை மாலையில் அரசாங்க அறிக்கையாக வெளியிடப்பட்டுள்ளது இந்த அறிக்கையை அடிப்படையாகக் கொண்டே பிரதம மந்திரி திரு. டி. எஸ். சேனநாயகா அரசாங்க ஊழியர்களின் சங்கங்கள தொழில் சங்கங்கள் முதலிவற்றிற்கு வேண்டிய அரசாங்க நிபந்தனைகளையும் சிபாரிசுகளையும் ஏற்படுத்தியுள்ளார்.

## கள்ளத்தனமாக ஆஸ்திரேலிய தங்கம் கடத்தல்

### சிங்கப்பூர் மத்திய இடமாம்

சிங்கப்பூர். அக். 26

ஆஸ்திரேலியாவுக்கும் இந்தியாவுக்கும் இடையில் தங்கம் கள்ளத்தனமாக கடத்தப்பட்டு வருவதாக அறிந்து மூன்று ஆஸ்திரேலிய அதிகாரிகள ஆஸ்திரேலிய இந்திய தொடர்புகளையுடையவர்களுடன் சம்பாஷணை நடத்தியுள்ளனர் ஆஸ்திரேலியாவில் இருந்து கராச்சிக்கு திருடுத்தனமாக கடத்தப்படும். தங்கம் சிங்கப்பூரில் மத்திய இடமாகக் கொண்டு நடைபெறுதாகவும் கராச்சியில் ஆஸ்திரேலிய தங்கம் மூன்று பங்கு விலை அதிகம் பெறுவதாகவும் கூறப்படுகிறது.

(ராய்ட்டர்)

## பிரிட்டனில் இடதுசாரிகள் பலம் அதிகரிக்கவேண்டும்

### பிரிட்டிஷ் யுத்த மந்திரி முழக்கம்

### பிரிட்டனை வீழ்த்த அமெரிக்கா சதி செய்கிறதென்கிறார் ரஷிய நிபுணர்

டன்டி, அக்.

பிரிட்டனில் இடதுசாரிகளின் பலமதிகரித்து பிரிட்டன் முற்போக்கு அரசியல் மயமாக வேண்டுமென்று பிரிட்டிஷ் யுத்த மந்திரி இன்று இங்கு நடைபெற்ற ஸ்கொட்டிஷ் தொழிற் கட்சி மகாநாட்டில் பேசியபோது தெரிவித்தார். அவர் மேலும் கூறியதாவது:- இவ்வித நிலைமை ஏற்படாவிடில் இன்னும் சிலவருடங்களில் நமது நிலை இப்பொழுதிருப்பதைவிட இன்னும் அதிக மோசமாகிவிடும் சாப்பிடும் உணவுக்காக பிரிட்டன் அளவுக்கு மீறி அந்நிய நாடுகளை எதிர்பார்த்து வாழ வேண்டியதாக இருக்கிறது. இது மிக அபாயகரமான நிலைமையாகும்.

### கூட்டத்தில் குழப்பம்

லண்டன், அக். 25

நேற்றிரவு லண்டன் ஹாலில் யுத்த எதிர்ப்புக் கட்சியான பிரிட்டிஷ் ஜனக் கட்சித் தலைவர் அக்கட்சிக் கூட்டத்தில் பேசிக் கொண்டிருக்கும்போது ஒரு மனிதன் பச்சரிசியைத் திக்கொளுத்தி அதைக் கூட்டத்தில் எறிந்தான். உடனே கூட்டத்திலிருந்த 200 பேர்கள் இருந்த இடத்தைவிட்டு எழுந்து வெளியே ஓடிப்போனார்கள் அப்பொழுது கட்சி உடைகளும் பதக்கங்களும் தரித்த தொண்டர்கள்வாடு நெருப்பை அணைத்தார்கள். கட்சித் தலைவரான பெட்போர்ட் கோமகனார், பிரிட்டன் ஜெர்மனியைக் கைவிட்டுவிட்டு அங்குள்ள தனது வேலைகளை ஒரு பகுதியை ஜெர்மனியர்களிடமும் மற்ற பகுதியை அமெரிக்கர்களிடமும் ஒப்புவிக்கவிட வேண்டுமென்று பேசியபோது கூட்டத்தில் கூச்சலும் குழப்பமும் ஏற்பட்டது பெட்போர்ட் கோமகனார் பின் புறவாசல் வழியாக வெளியேறி அங்கு நின்றுகொண்டிருந்த தனது காரில் ஏறி ஓடிவிட்டார். "நீர் ஜெர்மனிக்கே ஓடிப் போம்" என்று ஜனங்கள் கூச்சலிட்டனர்.

### ஸ்பெயின் கண்டனம்

மாட்ரிட், அக். 25

பிரிட்டிஷ் அந்நியநாட்டு மந்திரி பெவின் ஸ்பெயினின் விவகாரங்களில் தலையிடுவதைக் கண்டித்து ஸ்பெயின் சர்க்கார் மாட்ரிட் நகரிலுள்ள பிரிட்டிஷ் தானிகருக்கு ஒரு கடிதம் அனுப்பியிருக்கிறார்கள்.

### ஜெர்மனியில் பிரிட்டன் கொள்கை

லண்டன், அக் 25

ஜெர்மனியில் பிரிட்டிஷ் தொழிற்கட்சி சர்க்கார் அனுஷ்டித்து வரும் கொள்கையைக் கண்டித்தும் யுத்த நஷ்டஈடாக ஜெர்மனியிலுள்ள யந்திரங்களைக் கழற்றுவது சம்பந்தமான நடவடிக்கையைக் கண்டித்தும் பார்லிமெண்டில் மும்முரமான விவாதம் நடைபெறும். கனசர்வேடிவ் கட்சி அங்கத்தினரும் லிபரல்கட்சி அங்கத்தினர்களும் தங்களது பலமான ஆட்சேபனைகளைத் தெரிவிப்பார்கள் அதற்குப் பதிலளிக்க சர்க்கார் கட்சி உபத் தலைவர் திரு ஈடேயும் தயாராக இருக்கிறார்.

### பிரிட்டனைக் குழியில் தள்ள அமெரிக்க முயற்சி

மாஸ்கோ, அக் 25

பிரபல சோவியத் பொருளாதார நிபுணரான திரு. வோரகா 'நியூ டைம்ஸ்" பத்திரிகையில் பின்வருமாறு எழுதுகிறார்:- அமெரிகக பிரிடடனைக் குழியிலே தளளி அதைக் கீழ்தர நாடாக்கி விட்டு உலகில் தனது ஆதிக்கத்தை நிலைநாடட முயல்கிறது. இதற்காகவே பிரிட்டன் தனது ஏகாதிபத்திய சலுகைவரி முறையைக் கைவிட விடவேண்டுமென்று அமெரிக்கா கோருகிறது இதற்காகவே அமெரிகக மேறகு ஐரோப்பிய நாடுகளுக்கு மார்ஷல் திட்டதைப் புகுத்துகிறது. ஏகாதிபத்தியவரிமுறையைக் குறைக்க வேண்டும் அல்லது கைவிட வேணடுமென்ற நிபந்தனையுடனே யே அமெரிக்கா பிரிட்டனுக்கு 2-டன் உதவி செய்திருக்கிறது. இதனால் பிரிட்டிஷ் சாம்ராஜ்ய பொருளாதார ஐக்கியம் சிதறும். அமெரிக்கா பிரிட்டிஷ் சாம்ராஜ்ய நாடுகளின் மார்க்கெட்டுகளைக் கைப்பற்றிக்கொள்ளும். ஆகவே இதன் மூலம் பிரிடடனை அமெரிக்கா தனக்கு அடிமைப்படுத்தும். முடிவில் இப்பொழுது அமெரிக்காவிலுள்ள 48 மாகாணங்களுடன் பிரிட்டனும் 49-வது மாகாணமாக ஆகிவிடும்.

### லார்டு லிட்டன் மரணம்

லண்டன், அக் 25

வங்க கவர்னராகவும் இந்தியா ஆக்டிங் வைஸராயாகவும் இந்தியா உதவி மந்திரியாகவும் 1932-ல் சர்வதேச சங்கத்தன் பஞ்சூரியா கமிஷன தலைவராகவுமிருந்த லார்டு லிட்டன் தனது 71-வது வயதில் இன்று மரணமானார். இவர் சிம்லாவில் பிறந்தவர்.

### கேம்பெல் ஜடிபன்

கிளாஸகோ, அக். 25

பிரிட்டிஷ் சுயேச்சைத் தொழிற்கட்சியைச் சேர்ந்த திரு. கேம்பல் ஜடிபன் தனது 62-வது வயதில் இன்று மரணமானார். இவர் பார்லிமெண்டில் கிளாஸகோ தொகுதி பிரதிநிதியாக இருந்தவர் 1936 வருடம் பார்லிமெண்டில் 34 மணி நேரம் விடாத விவாதம் நடைபெற்றபோது செங்கொடி கீதம் பாடியதற்காக இவரும் மற்றும் இரு அங்கத்தினர்களும் வெளியேற்றப்பட்டனர். அதே வருடம் அவர் பாலஸ்தீனத்தில் யூதர்-அரேபிய தொழிலாளர் ஒற்றுமையை ஏற்ப

(4-ம் பக்கம் பார்க்க)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

சுதந்திரன்
THE "SUTANTIRAN"
194 ஏ, நட்டாத் தெரு, கொழும்பு.
போன்: 3411.

சர்வஜித்து ஒரு ஐப்பசி மீ 10உ
திங்கட்கிழமை

## வெறியா? தேசியமா?

நேற்று முன்தினம் கொழும்பு நகர சபை மண்டபத்தில் இலங்கையின் தேசியக்கொடி சம்பந்தமாக ஒரு பொதுக்கூட்டம் நடைபெற்றது. அதில் பேசியவர்கள் யாவரும் சிங்கள அரசியல்வாதிகள். அவர்களில் குறிப்பிடத்தக்கவர்கள் இருவரே. ஒருவர் பழைய கல்வி மந்திரியார் திரு. கன்னங்கரா; மற்றவர் திரு. குணசிங்கா ஆவர். திரு. குணசிங்கா இப்பொழுது தொழில் மந்திரியின் காரியதரிசியாகவிருக்கிறார். அவர் பேசியபொழுது "பாராளுமன்றக் கட்டிடத்தில் சிங்களக் கொடியாகிய சிங்கக் கொடியல்லாது வேறு எந்தக் கொடியையாவது உயர்த்தினால் நான் என்னுடைய பெரும் பட்டாளங்களை கொண்டு சென்று அதைப் பிடுங்கி எறிவேன்" என்று ஆணையிட்டுள்ளார் ஒரு பானை சோற்றுக்கு ஒரு சோறுதான் பதம் பார்ப்பது. சென்ற பதினாறு வருட காலங்களாக இன்று யூ என் பி க்கட்சியிலுள்ள சிங்கள அரசியல் வாதிகள் வகுப்பு வாதத் தீயை வளர்த்தார்கள். இந்நாட்டை ஜனம பூமியாகக் கொண்டவர்களை இலங்கை மக்களெனக் கருதாது சிங்களவர், தமிழர், சோனகர் என்று காரியங்கள் செய்தார்கள். இப்பொழுது தங்களின் கீழடிமைகளாக விருக்கமற்றும சிறுபான்மையர் விருப்பவிட்டால் அடக்குமுறையை உபயோகிக்கவும் தயார் என்பதை இப்பேச்சு குறிகின்றதலவா? இருபதாம் நூற்றாண்டில் இதை எவர் ஒப்புவர்?

சாதாரணமான ஒருவர் பேசியிருந்தால் நாம் கவலை கொள்ளக் தேவையில்லை ஆனால் திரு. குணசிங்காவோ ஒரு பொறுப்பு வாய்ந்த மந்திரியின் காரியதரிசி அதுவுமல்லாமல் யூ. என். பி. அரசாங்கத்திலுள்ளவர். தடித்த வகுப்புவாத கொழும்பு மத்திய பகுதி தேர்தலின் போது "தமிழன் வாக்கு எனக்கு வேண்டாம்! இந்தியன் வாக்கு எனக்கு வேண்டாம்! இந்தியனுக்கு அல்லது தமிழனுக்கு பிறந்த சிங்களவன் வாக்கு எனக்கு வேண்டாம்!" என்று பகிரங்க பேடைகளை வகுப்புவாதத்தை பாமரச் சிங்கள மக்களின் நெஞ்சில் அழுத்தியவர். யானை வருவதற்கு முன் மணியோசை கேட்கும் என்பார்கள். அதுபோன்று இவரது பேச்சு சிறுபான்மை மக்களுக்கு என்ன தீமைகளை எதிர்காலத்தில் விளைக்குமோ என்பது கடவுளுக்குத்தான் தெரியும் அவர் பேசிய கூட்டத்தில் இருந்தவர்களுமோ அத்தனை பேரும் படிப்பற்ற சிங்கள மக்கள் ஏதோ தமிழரும், மற்றும் சிறுபான்மையரும் தங்கள் கொடியாகிய சிங்கக் கொடியை உயர்த்த விடாது அட்டூழியம் செய்கிறார்கள் என்றுதான் அவர்கள் எண்ணியிருப்பார்கள். ஏன்? ஏனது "பெரும் பட்டாளங்களை" கொண்டு வந்து வேறு கொடிகளைப் பிடுங்கி எறிவேன் என்று திரு. குணசிங்கா சூளுரைத்திருக்கிறாரலவா?

இன்று இந்தியாவில் நடக்கும் அட்டூழியங்களுக்குக் காரணம் திரு குணசிங்கா போன்ற தலைவர்களின் பேச்சுக்கள் தான். அந்த நிலைமையை இங்கும் உண்டாக்கவா திரு. குணசிங்காவும் மற்றும் யூ. என். பி த தலைவர்களும் எண்ணியிருக்கிறார்கள்? நோய் முற்றிவிட்டது உடனே இதற்கு முற்றுப்புள்ளி வைக்க வேண்டும் சிங்கள மக்களுக்குள் பெருந்தன்மையும் தேசபற்றுள்ள தலைவர்களும் இல்லாமல் இல்லை. இவர்கள் இனியும் வாழாவிருக்க முடியாது யூ. என். பி க்கு ஓயாத சிறுபான்மை மக்களை மனிதர்களாகவே எண்ணுவதாகத் தோன்றவில்லை.

## தொழிலாளர் தலைவர்களுக்கு அனுமதிச் சீட்டுகள்

### அமெரிக்க அட்டர்னி ஜெனரல் தீர்மானம்

பாரிஸ், அக். 26

பிரஞ்சு தொழிற் சங்கங்கள் காங்கிரஸின் கம்யூனிஸ்ட் காரியதரிசி எம். ரேய்மொண்ட் என்பவருக்கும் எம் லெப்ரன் என்பவருக்கும் அமெரிக்காவுக்குள் புகுவதற்கு அனுமதிச் சீட்டு வழங்கப்பட மாட்டாதென முன் தெரிவிக்கப்பட்டிருந்தது இப்பொழுது அமெரிக்க அட்டர்ணி ஜெனரல் இவர்கள் இருவரும் அமெரிக்காவுக்கு வந்து கைத்தொழில் ஸ்தாபனங்கள் காங்கிரஸ்களின் தலைவர்களைச் சந்திக்க அனுமதிச் சீட்டுகள் வழங்கத் தீர்மானித்துள்ளாரென்று அறிவிக்கப்பட்டுள்ளது.

(ராய்ட்டர்)

## கம்பெனியில் சிறுமியின் திருட்டு

களுத்துறை, அக் 26

இம்மாதம் 18-ம் தேதி வைட்டெவே லெயிலோ அன்கம்பெனி லமிடெட்டில் சில பொருள்களை களவாடியதாக 13 வயதான கே. அலிஸ்நோனா என்னும் பெண்மீது குற்றம் சாட்டப்பட்டு கொழும்பு கோட்டை மாஜிஸ்டிரேட் முன் எடுக்கப்பட்ட வழக்கில் எதிரி குற்றத்தை ஒப்புக்கொண்டதன்மேல் ஒரு வருட நன்னடத்தைப் பிணையில் போகுமாறு நீதிபதி தீர்ப்பளித்தார்,

## ராயல் கல்லூரி மாற்றங்களுக்கு எதிர்ப்பு

கொழும்பு, அக். 27

ராயல் ஆரம்ப பாடசாலை 195-ம் ஆண்டு ராயல் கல்லூரி அதிபரின் நிர்வாகத்தின் கீழ் கொண்டுவர படடிருந்தது பின்னர் கல்வி மந்திரி அந்த ஆரம்ப பாடசாலையை இவ்வருடம் மே மாதத்தில் ராயல் கல்லூரி அதிபரின் நிர்வாகத்தில் இருந்து பிரித்து தனி நிர்வாகத்தின் கீழ் நடத்த ஒழுங்கு செய்திருந்தார். இதனைக் கண்டித்தும் இந்த ஆரம்ப பாடசாலையை ராயல் கல்லூரி அதிபரின் நிர்வாகத்தின் கீழ் கொண்டுவர வேண்டுமென்றும் கல்வி மந்திரிக்கு விண்ணப்பிக்கப்பட்டுள்ளதாக அறிய படுகிறது.

## பேனாட்டு சங்கீத ஞானத்தால் சிறந்த மாலினி

கொழும்பு, அக் 27

பியானோ வாசிப்பதில் இலங்கையில் பரிசுகள் பெற்ற ஒரு பெண் மாலினி ஜெயசிங்கம் பீரிஸ் என்பவர் பியானோ வாசிப்பதில் விசேட பயிற்சி பெற லண்டன் "ராயல அக்காடமி ஆப் மியூசிக"கில் சேரும்பொருட்டு டிஸம்பர் 2-ம் தேதி இவ்வூரிலிருந்து புறப்படுவார் இந்த சங்கீதக் கலாநிதி ஜனவரி 7-ம் தேதி ஆரம்பமாகும் இப்பெண்மணியின் முன்னேற்றத்துக்காக இலங்கையிலுள்ள ஒரு பத்திரிகை ரூ 2459 சேர்த்துக்கொடுத்துள்ளது.

ஒரு சமூகத்தினரின் கொடியை மற்ற சமூகத்தினரை ஏற்கும்படி கூறுவதை எந்த அரசாங்கமும் செய்யாது. இவ்விஷயத்தில் சிங்கள மக்களும் மற்றும் சிறுபான்மை மக்களும் ஒன்றுபடுத்தொண்டாற்றுவதே இப்போது இன்றியமையாததாய் இருக்கிறது. ஒன்றுபட மறுத்ததால் திரு. குணசிங்கா படையை வகுக்கவும் கொடியைப் பிடுங்கவும், மற்றும் சிறுபான்மையரும் அதே போன்ற எதிர்ப்புச் செயல்களைச் செய்யவும் நிலைமை ஏற்படவிடும். இத்தகைய அநாகரீகக் கொடுமை நடைபெறாதிருக்க, நாடு மக்கள், தலைவர்கள், அரசியல் வாதிகள், பத்திரிகையாளர்கள் யாவரும் முயற்சி செய்தல் வேண்டும் எல்லாச் சாதியினரும் ஏற்றுக் கொள்ளக் கூடிய தேசியக் கொடியை அமைக்க வேண்டும்.

# தமிழ்க் களஞ்சிய ஆரம்ப விழா

## தமிழ் இலக்கியத்திற்கு விமோசனம்

### தமிழ் சுருக்கெழுத்துப் பயிற்சியாளர் இலங்கைக்கும் தேவையிருக்கும்

### ஆங்கில நாமங்கள் தமிழ் மயமாகின்றன

சென்னை, அக் 24

தமிழ்க்களஞ்சியத்தின் ஆரம்ப விழா இன்று காலை சர்வகலாசாலைக் கட்டிடத்தில் வெகு சிறப்பாக நடைபெற்றது சர்வகலாசாலை உப அதிபதியட்சகர் டாக்டர் ஏ லக்ஷ்மணசாமி முதலியார் தலைமை வகித்தார் ஸ்ரீமான்கள் டாக்டர் ராஜன், ப. கோபாலரெட்டி, குண்டூர் நரசிம்மராவ், டாக்டர் திருமூர்த்தி, டி கே. சிதம்பரநாத முதலியார், வையாபுரி பிள்ளை, டி பி. மீனாக்ஷிசுந்தரம் பிள்ளை, என். சதாசிவராயனு, ஸி ஆர் சீனிவாசன், ஸ்ரீ வெங்கடராவ் கே. மாதவ மேனன், ஹாஜி அப்துர்ரஹ்மான் சாகிப், சதக்தப்பி மரைக்காயர் முதலியோர் வந்திருந்தனர்.

முதலில் தெய்வ வணக்கம் நடைபெற்றது. தமிழ் களஞ்சிய கமிட்டியின் காரியதரிசி ஸ்ரீ ஆர் கிருஷ்ணமூர்த்தி யாவரையும் வரவேற்றுப் பேசுகையில் தமிழ்க் களஞ்சிய நிதிக்கு ஒரு மாதத்திற்குள் ஒரு லக்ஷத்திற்கு மேல் வசூல் செய்யப்பட்டிருப்பதாயும் இன்னும் மேற்கொண்டு ஏராளமான தொகை வேண்டியிருப்பதாயும் தமிழ் அபிமானிகள் முன்வந்து இந்த மகத்தான பணிக்கு உதவிபுரிய வேண்டும் என்றும் சென்னை சர்வகலாசாலையும் இதற்கு உதவி செய்ய வேண்டும்என்றும் தமிழ்க்களஞ்சிய காரியாலயத்தை ஸ்தாபிப்பதற்காக இடங் கொடுத்ததற்காக சர்வகலாசாலை அதிகாரிகளுக்கு நன்றி செலுத்துவதாயும் கூறினார்.

கல்வி மந்திரி ஸ்ரீ டி. எஸ் அவினாசிலிங்கம் செட்டியார் பிறகு பேசினார். அவர் கூறியதாவது:- தமிழ் வளர்ச்சியில் ஜனங்களுக்கு ஆர்வம் இருக்கிறதென்பதற்கு ஒவ்வொரு நாளும் அறிகுறி ஏற்படுக்கொண்டிருக்கிறது ஒரு மாத காலத்தில் இத்தனை பெரிய தொகை கிடைக்கும் என்று நாம் எதிர்பார்க்கவில்லை. பெரியார்கள் பலர் தமிழ்ப் பணி செய்ய முன் வந்திருப்பது எனக்கு அளவிலா மகிழ்ச்சியைத் தருகிறது. உழவு புய, சிரத்தையும் இருந்தால் எந்த மக்களுடைய காரியகதையும் சாதித்து விட முடியும். ஸ்ரீ திருகூட சுந்தரம்பிள்ளை உதவி ஆசிரியராக இருக்கச் சமமதித்திருக்கிறார். அவர் இன்று வேலையைத் தொடங்கியிருக்கிறார்என்றும் தெலுங்கு அகராதியை அமைக்க ஏற்பாடு செய்யப்பட்டு வருவதாயும் அதற்காக மந்திரி பி. கோபால ரெட்டியின் தலைமையில் ஒரு கமிட்டி நியமிக்கப்பட்டிருப்பதாயும் ஸ்ரீ அவினாசிலிங்கம் செட்டியார் கூறினார்.

ஸ்ரீ திருகூடசுந்தரம் பிள்ளை தமிழ்தாயின் ஆசீர்வாதத்தைக் கொண்டு பணி செய்ய முன் வந்திருப்பதாயும் தமிழ் அன்பர்கள் ஒத்துழைக்க வேண்டும் என்றும் கேட்டுக் கொண்டார்.

டாக்டர் லக்ஷ்மணசாமி முதலியார்பேசுகையில்தமிழ்க்களஞ்சிய திட்டத்திற்கு சர்வகலாசாலை பூரண ஆதரவு கொடுக்கும் என்றும், தமிழ் வளர்ச்சிக்கு பூரண ஆதரவு கொடுக்கும் என்றும், தமிழ் வளர்ச்சிக்கு ஹிந்துக்கள் மாத்திரம் ஆதரவு கொடுக்கிறார்களென்று நினைக்கக்கூடாதென்றும், பல சமயங்களையும், பாஷாவாரி பிரதேசங்களையும சேர்ந்தவர்கள் அனைவரை தெரிவித்திருக்கிறார்கள் என்றும் உதாரணமாக ஸ்ரீமதி. டோரா லாசரஸ என்னும் அம்மையார் ரூ 70,000 தமிழ் அபிவிருத்திக்கு நன்கொடை கொடுத்திருப்பதாயும் கூறினார்.

டிரோஜன் கம்பெனி ஸ்ரீ அண்ணாமலை செட்டியார் வந்தனோபசாரம் கூறினார்.

### ஆங்கிலப் பெயர்களை அகற்றி தமிழ்ப் பெயர்கள்

சென்னை, அக். 25

பிரிட்டிஷ் ஆதிக்கத்தின் கீழ் மாறறப்பட்டு இருந்த இந்திய ஸ்டேஷன்களின் பெயர்களை பழையபடி திருத்தியமைக்க தென்னிந்திய ரயில்வே அதிகாரிகள் தீர்மானித்துள்ளனர்.

தமிழ் பெயர்களை அர்த்தமில்லாமல ஆங்கிலத்தில் மாற்றி அழைக்கப்பட்டுவந்த 'பீச்" "போர்ட்" "பார்க்" மின்சார ரயில்வே ஸ்டேஷன்களின் பெயர்கள் இப்பொழுது தமிழில் முறையே "கடற்கரை" "கோட்டை" "பூங்கா" என்று மாற்றியமைக்கப்பட்டுள்ளன

இதே போன்று தமிழ் நாடெங்கும் தமிழ் கலாச்சாரத்திற்கு முரண்பாடாக ஆங்கிலத்தில் வைக்கப்பட்டுளள பெயர்களையெல்லாம் தமிழிலேயே ஆக்க ஏற்பாடுகள் நடைபெறுகின்றன.

### தமிழ் சுருக்கெழுத்துக் கல்லூரி

சென்னை, அக். 25

சென்னை பாலிமெண்ட் தலைவர் திரு. ஜே சிவசண்முகம் பிள்ளை இன்று தியாகராய நகரில் தமிழ் சுருக்கெழுத்துக் கல்லூரியைத் திறந்து வைத்தார். தமிழ் சொற்பொழிவுகள் நிகழ்த்தப்படும் போது அவைகளை சுருக்கெழுத்தில் எடுப்பதன் அவசியத்தையும் இதன் தேவையும் உபயோகமும் நாளுக்கு நாள் அதிகரித்து வருவதையும்பற்றி தலைவரை வரவேற்ற கல்லூரி பிரதம ஆசிரியர் திரு. டி. எஸ் ராமானுஜ ஐயங்கார் வரவேற்புப் பேசியபோது கூறினார் தலைவர் பேசியபோது, எதிர் காலத்தில் இக் கல்வி மிகவும் பயன்படுமென்றும சுருக்கெழுத்துப் பயிற்சி பெற்றவர்கள் இனி அதிக மானவர்கள தேவையாக இருக்குமென்றும் தெரிவித்தார் இந்தியா சுதந்திரமடைந்து விட்டதாலும் தமிழ் அபிவிருத்தி அதிதுரிதமாக ஏற்படுவருமென்றும் தமிழ் மாகாணத்தில தமிழ் அரசாங்க பாஷையாக ஆக்கமாதலாலும் சட்ட சபைகளிலும் நீதி ஸ்தலங்களிலும் தமிழிலே பேச்சுகள் நடைபெறுமாதலாலும் சுருக்கெழுத்துப் பயிற்சியாளர்கள் மிகவும் தேவையாக இருக்குமென்றார்

இலங்கை முதலிய இடங்களில் தமிழ் அரசாங்க பாஷையாக இருப்பதால் அங்கும் தமிழ் சுருக்கெழுத்தாளர்கள் வேண்டியிருக்குமென்றும் கூறினார்

## பிரதமருக்கு வாழ்த்து

### "கோரம்" இன்றி கூட்டம் நிறுத்தப்பட்டது

கொலன்னாவை, அக். 26

கொலன்னாவை அர்பன் சபையின் கூட்டத்தில் உதவி தலைவர் தலைமை வகித்து நடத்தினார் இக்கூட்டத்தில ரூபாய் 16 38) 7ம் சதம் உபரானம் பிரேரணை ஒன்று நிறைவேறியது. இக்கூட்டத்தில் பிரதம மந்திரிக்கு சபையின் சார்பாக வாழ்த்துச் செய்தி அனுப்புவது பற்றி முகாந்திரம் டி. எஸ் ஸி உமலியா என்பவர் ஒரு தீர்மானம் கொண்டுவந்த போது திரு. டபிள்யூ ஏ. டி ஜேம்ஸ் என்பவர் வெளியேறிய தால பிரஸ்தாப தீர்மானத்தை எடுத்துக்கொள்ள போதிய "கோரம்" இன்றி கூட்டம் நிறுத்தப்பட்டது.

## பாடசாலை அதிபர் நீரில் மூழ்கி மரணம்

திரிகோணமலை, அக் 26

திரிகோணமலை சென் ஜோஸப் கல்லூரி ரெக்டர் சகோதரர். ஜீலியன் தெய்வான் என்பவர் சான்டி கோவ் என்னுமிடத்தில சனிக்கழமை குளித்துக் கொண்டிருக்கையில் நீரில் மூழ்கி மரணமானார். இவரது பிரதம சில மணி நேரங்களின பின்னர் கண்டெடுக்கப்பட்டது.

## முகத்திலடித்து பணம பறிக்கப்பட்டது

கொழும்பு அக். 27

கோட்டை ஹோளபிட்டல் ரோடடைச்சேர்ந்த எம் எல் எம் ஏ கபூர் என்பவர் தாம் நேஷனல் வங்கியில் இருந்து ரூ 149-25க்கு ஒரு செக்கை மாற்றி பணத்தைக் கையில் கொண்டுவந்ததாகவும் சதாம் வீதி நடை பாதையில் வருகையில் ஒரு கார் டிரைவர் தனது முகத்தில அடித்துவிட்டு பணத்தைப் பறித்துக்கொண்டு ஓடிவிட்டதாகவும் ஆளை தாம் அடையாளம் காட்ட முடியுமென்றும் போலிஸாருக்கு தெரிவித்துள்ளார்

## பிரேஸிலில் இருந்து 21,000 டன் அரிசி

### திரும்பவும் பேச்சுவார்த்தை நடக்கிறது

கொழும்பு, அக் 26

பிரேஸில் இருந்து மேலும 21,000 டன் அரிசி கிடைப்பது இன்னும் சில வாரகாலத்துள் முடிவாகத் தெரியக் கூடுமென்று கூறப்படுகிறது இதுசம்பந்தமான பேச்சு வார்த்தைகள் ஆரம்பிக்கப்பட்டு விட்டனவென்றும தென் கிழக்காசிய அரிசி சப் கமிட்டி கூட்டம் சிங்கப்பூரில் அடுத்த மாதம ஆரம்பிக்குமுன் திருப்திகரமான முடிவுகளைக் காண முடியுமென்றும்உணவு இலாகா அதிகாரியொருவர் கூறுகின்றார்.

கடந்த ஜூலை மாதத்தில் சர்வதேச அவசர உணவுச் சபையில் இருந்து பிரேஸில் விலகியதால் இலங்கைக்கு அங்கிருந்து கிடைக்க வேண்டிய 21,000 டன் அரிசியும் கிடைக்காதென்று கூறப்பட்டிருந்தது இப்பொழுது பிரேஸில் இந்த உணவுச் சபையில் மீண்டும் சேர்ந்து விட்டதால் பேச்சு வார்த்தை மீண்டும் ஆரம்பிக்கப்பட்டுள்ளதாகவும் கூறப்படுகிறது

## பண்டைப் பெருமை வாய்ந்த பழம் பெரும் இனம்

### ஒப்புவமையில்லா நாகரீகம் படைத்த தமிழர்

### திக்குகள் எட்டுஞ்சென்று ஜெயக்கொடி நாட்டிய திராவிட மக்கள்

## இலங்கை, தமிழர்களது நாடே!

(திரு. பி. என். திருநாவுக்கரசு டில்லியில் நடைபெற்ற ஆசியா உறவு மகா நாட்டுக்குச் சென்றிருந்தபோது அகில இந்திய ரேடியோவில் "தமிழர் யார்" என்னும் பொருள் பற்றி நிகழ்த்திய சொற்பெருக்கின் சாராம்சம்)

தமிழர் யார்? என்ற வினாவுக்கு விடைதேடுவோம விடை அறியாத யாரும் ஒரு வினாவினாவுக்கிறேன். தமிழர் எந்த ஜாதிக்குச் சேர்ந்தவரென்று ஆராயுமுன் சாதியென்றாலமனுஷ பிரிவைக் கருதும் சொல்லாக உபயோகித்துக் கொள்ளுவோம்.

இக்காலங்களில்உள்ள சாதிப் பிரிவுகள் வெள்ளைச்சாதி, மஞ்சள் சாதி, கறுப்புச்சாதி, சிவப்புச்சாதி பெனவாகும் இவர்களுக்குமுக்கியமானவை அடைளங்கள், அவயவங்கள், எலும்புக் கோர்வைகளின் வித்தியாசங்களே. இவர்களெல்லாரும் தம் சொந்தத் தேசங்களைவிட்டு வேறுநாடுகளில் வசித்தால் தங்கள் சாதிக்குரியகுறிகளைமாற்றி விடுகிறார்கள் மேலும், உலகத்திலுள்ள பாஷைப் பிரிவுகளையும், நாகரீகக் கூட்டங்களையும் சமயக் கட்சிகளையும் மேற்கூறிய மானிட சாதிப் பிரிவுகளில் கட்டுப்படுத்தாதுபோல் எனக்குத் தோற்றுகிறது.

இவையை விஞ்ஞானமூலப் பிரிவாகவோ, மனிதப்பிரிவு சாஸ்திரமுறைப்படியோ பார்த்தால் பிரிவு சிறத்தலல்ல உறுப்புகள் அமைபினால்தான் என்பது தெரியும்.

ஆதியில் ஒரு மானிடசோடு, ஆதி ஆதாமும ஏவாளும்தோன்றி, மானிட கோடிகள் உலகமெல்லாம் பரவினதென்று ஏற்காமல், சாதியென்னவென்று வினவினால் இதற்குவேறுவிடையொன்று கடைக்கிறது. பிரக்தியட்சமாய் மூன்று பிரிவுகளே நன்று துலங்குகின்றன. வெள்ளைக்காரர் பிரிவு, மஞ்சள் சனப்பிரிவு, கறுப்புச் சனப்பிரிவு என்று உள்ள ஏனைய பிரிவுகள் காலங்கள் காலங்களாக தேசங்கள் தேசங்களாக இவர்களே மாறுபட்டு கலந்ததால் தோன்றின வென்றால் என்ன?

கிறிஸ்து யுகத்தில், ஐரோப்பியர் இந்தியாவுக்கு கிழக்குப் பாதைகளால் அல்லதுமேற்குப் பாதைகளால் வந்ததால் கிழக்கு மண்டலம் மேற்கு மண்டலமெனப் பிரிபட்டு விளங்கப்படுகிறது. ஆனால் இது எப்போது மிருந்த பிரிவல்ல. உலகம் உருண்டை என்ற பின்பு கிழக்கு மண்டலம் மேற்கு மண்டலமென்று பிரிபடக் கூடியதுமல்ல. ஆனால் இப்பொழுது ஐரோப்பியரெனக் கூறப்படும் சிலர் இந்தியாவில் ஆரிய நூற்களை சமஸ்கிருத பாஷையில் கற்று, இந்தோ-ஆரியம் என்ற ஒரு சமபந்ததை இயக்கினார்கள. இதில் தமிழ் அல்லது தென்னிந்தியாவிலுள்ளபாஷைகளாவது மதங்கள் சனங்களாவது இந்த இந்து-ஆரிய ஆராய்ச்சிகளில சேர்க்கப்படவில்லை. ஆனால் எப்பொழுதும் தென்னிந்தியரும் ஓர் விசேட நாகரீகக் கூட்டமெனசமஸ்கிருதநூல்கள் வழியாக நாடடப்பெற்ற ஓர் உண்மை தமிழ் பாஷையோ சமஸ்கிருதம் சேராமல சமஸ்கிருதத்திற்குமுன் உள்ள காலங்களிலே உள்ள பாஷை; காலங்காலத்தில் சமஸ்கிருதம் மறைந்தும் தமிழ் இன்றும் தமிழ் சனங்களின பாஷையாய் விளங்குகிறது.

தற்காலம 4-ம் மதுரைச் சங்கம்ஒன்று முயன்று நடைபெறுகிறது. ஆனால் 3-ம் மதுரைச் சங்கத்துத் தமிழ் இலக்கண இலக்கிய நூல்களின் வாயிலாக இச்சங்கத்துக்கு முன் உள்ள இரண்டு சங்கச் சரித்திரவரலாறுகளையும் ஆராய்ந்தால் தமிழர் மிகப்பூர்வீக சாதியாராயும் அவர்கள் இருந்த நாடுகள் கன்னியா குமாரிக்கப்பால் சமுத்திரத்தில் ஆழ்ந்துள்ளனவென்றும் ஒத்துக்கொள்ளப்பட்டன. இப்பொழுது நடைபெறும் ஆராய்ச்சிகளால் இந்தியாவுக்கு வடமேற்கு பாகமாக ஓர் பழமை பொருந்திய நாகரீகமும தற்காலங்களுக்கு ஒப்புள்ள ஓர் சீர்திருத்தமுமடைந்த நகர்கள் மொகெஞ்சதாரோ, ஹரப்பாவென்னும் இடங்களில் இருந்ததாகக் காணப்படுகிறது. இவற்றின் காலம் கிறிஸ்துவுக்கு முன் 2300 வருடங்கள். ஆராய்ச்சியின் அத்தாட்சியால் தமிழர் யார் என்ற வினவுக்கு தமிழர் சரித்திர வரலாறு அறிந்தளவில், ஓர் பழமை பொருந்திய, பூர்வீக சாதியாரும், நாகரீகமுடையவர்களாயும் ஏற்க வேண்டியிருக்கிறது.

பழமையான இருக்கு வேதம் கிறிஸ்துக்கு முன் 1500-ம் வருஷமென்றது முடிவு. இதற்கும் அப்பால் 2300-ம் வருஷத்திலேயே ஒரு சிறந்த நாகரீகமாகத் தோன்றும சாதியார் யாவர்? அவரின் சந்ததியார் யார்? இவர்கள் ஆரியரல்ல திராவிடரே! இந்தத் தமிழ் உலகதாரின் நாகரீகம் ஜாவா, சுமத்திரா எங்கும் சென்றிருந்ததாக அடையாளங்களுண்டு. இக் காலங்களிலும தமிழர் தங்கள் தாய் தேசத்தை விட்டு ஆஸ்திரேலியாவிலேயோ இந்தோனேஷியாவிலேயோ தென் ஆப்பிரிக்காவிலேயோ மலாயாவிலேயோ அல்லது பர்மாவிலேயோ சீவித்து காலங்களிக்கிறது காண்கின்றோம். விதி பூர்வீகத் தொடர்ச்சியுள்ளதாகும். இராமாயணத்தில குறிக்கும் இலங்கையில் தமிழர்தான் இருந்து வந்தவரெனறும ஞான நூல்களாலும் நாக சகதையை பாராயணம பண்ணினவர்களென்றபடியால் அவர்கள் நாகரீகரென வும் குறிக்கப்படடுள்ளனர். அவர்கள் சீர்திருத்தச் சிறப்பே நாகரீகமென்று கொள்ளப்பட்டது.

இலங்கையும் இலங்கைக்கு வடபுறமாயுள்ள தீவக்குறையும் இலங்கைக்குத் தென்புறமாயுள்ள சமுத்திரத்திலுள்ள மாலை தீவுகள் சில்லீஸ மடகாஸ்கர், பீஜித்தீவுகள், மலாய்

(4-ம் பக்கம் பார்க்க)

## கிராமாபிவிருத்தியில் பெண்கள் தொண்டு

### மகிழா சமித்தி ஆண்டுவிழாவில் ஸர் ஒலிவர் பேச்சு

கொழும்பு, அக் 27

லங்கா மகிழா சமித்தியின் 17-வது வருடாந்தக் கூட்டம் கொழும்பிலுள்ள ஒய்டபிள்யூ. எம் ஏ தலைமைக் காரியாலயத்தில் மிஸ் சிலி கூரே தலைமையில் நடைபெற்றது. உள்நாட்டுவிவகாரம், கிராமாபிவிருத்தி மந்திரி ஸர் ஒலிவர் குணத்திலக்கா இக் கூட்டத்தில் பேசுகையில், கிராமாபிவிருத்தி வேலைகளைத் தாம் செய்யாவிடின் இலங்கையிலுள்ள பெண்களின் முழு ஆதரவையும் ஒத்துழைப்பையும் பெறத் தாம் தவறிவிட்டதற்கு ஒரு எடுத்துக் காட்டாக இது இருக்குமென்றும் எப்பொழுதும் இத் தொண்டுகளுக்கு பெண்கள் உதவி வேண்டுமென்றும் கிராமாபிவிருத்தியின் அவசியங்கள், சமூகசேவை முதலியன பற்றியும் கூறினர்.

கிராம மக்கள் கஷ்டப்பட்டாலும் சந்தோஷமாக இருக்க முயற்சிப்பார்களென்றும் வேலை நிறுத்தங்கள் போன்றவற்றை அவர்கள் கையாளமாட்டார்களென்றும் கூறியதுடன் சமூக சேவையில் ஸ்ரீமதி மூர் சீமாட்டியின் தொண்டுகளை பாராட்டியும் தொடர்ந்து பேசுகையில் குறிப்பிட்டார். மகிழா சமித்தியின் தொண்டுகளையும் அவர் பாராட்டினர். இச்சங்கத்தின் ஜீவிய பகளரவ தலைவராக டாக்டர் (ஸ்ரீமதி) மேரி ரத்தினமும், தலைவராக மிஸ் சிலி கூரேயும், உபதலைவராக ஸ்ரீமதி ஏ. எம். டி. சில்வாவும் தெரியப்பட்டனர். ஒன்பது அங்கத்தினர் கொண்ட ஒரு மத்திய சபையும் தெரியப்பட்டது ஸ்ரீமதி. ஓ எல். எவ் சேனவிரத்தினவின் நன்றியுரையுடன் கூட்டம் முடிவுற்றது.

## தெபுலானு பஸார் ஜலத்தில் மூழ்கியது

களுத்துறை, அக் 26

கலுகங்கை மேல்பகுதியில் மழை காரணமாக நதியில் வெள்ளப்பெருக்கு அதிகரித்துள்ளது. தெபுலானு பஸாரில் வெள்ளம் வந்துள்ளது. பல தேநீர்க் கடைகள் ஜலத்தில் மூழ்கிவிட்டன தெபுலானு போலிஸ் டேஷனுக்குச் செல்வோர் வத்தைகளினூடாகத்தான் செல்ல முடியுமென்று கூறப்படுகிறது. மிகவும் அழுகிய நிலையில் ஒரு பிரேதம் கரையில் ஒதுக்கப்பட்டுக்கிடந்ததை கண்டு பிடிக்கப்பட்டது.

யார் என்ற வினவுக்கு தமிழர் சரித்திர வரலாறு அறிந்தளவில், ஓர் பழமை பொருந்திய, பூர்வீக சாதியாரும், நாகரீகமுடையவர்களாயும் ஏற்க வேண்டியிருக்கிறது.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

சிங்களப் பத்திரிகை எழுதுவது:

# தமிழர் மீது துவேஷவெறி

## பகிஷ்கரிக்க வேண்டுமென்று தூண்டுகோல்

### 'சிங்கள பலய' பத்திரிகையில் யாழ்ப்பாணத்திலுள்ள ஒரு சிங்களவரின் கடிதம்

யாழ்ப்பாணத்திலுள்ள ஒரு சிங்களவர் எழுதியுள்ள ஒரு கடிதத்தை (25 10-47) "சிங்கள பலய" என்னும் பத்திரிகை பிரசுரித்திருக்கிறது. அக் கடிதத்தின் தமிழாக்கம்:

சென்ற பொதுத் தேர்தலின் பொழுது இலங்கைத் தமிழ் காங்கிரசும் அதன் தலைவருமான திரு. பொன்னம்பலம் கையாண்ட நடவடிக்கைகளை நாம் இன்னும் மறந்து போகவில்லை. அவரின் கட்சி (த. கா)க்கு ஆதரவு தேடிக் கொள்வதற்காக யாழ்ப்பாணக் குடாநாட்டில் நடந்த ஒவ்வொரு தேர்தல்கூட்டத்திலும், திரு பொன்னம்பலமும் அவரின் சகாக்களும் சிங்களவர்களுக்கும் சிங்களத் தலைவர்களுக்கும், சிங்கள ஜாதிக்கும் செய்த நிந்தனைகள் கணக்கிலடங்காது. யூ. என். பி. யும் சமசமாஜிகளும், சிங்கள மகா சபையும் சிங்களவர்களின் ஆதிக்கத்தை உறுதிப்படுத்துவதற்கு ஏற்பட்டவையாகும். நாங்கள் அக்கட்சிகளில் சேர்ந்துகொண்டால், எங்கள் நாட்டில் அவற்றிற்கு இடம் கொடுத்தால், தமிழர் சாகியம் சதாகாலமும் சிங்களவர்களுக்கு அடிமைப்பட்டே இருக்க வேண்டி நேரிடும். யூ. என். பி யாயினும் சமசமாஜக்கட்சியாயினும் சிங்களவர்கள் தலைமை வகிக்கும் எக்கட்சியிலும் எந்தவொரு தமிழன் சேர்ந்தாலும் அவன் உண்மையான தமிழன் ஆகமாட்டான். அவனின் சரீரத்தில் தமிழ் ரத்தம் சிறிதேனும் இல்லவே இல்லை. யாழ்ப்பாணம் சாவகச்சேரி, காங்கேசன்துறை ஆகிய தொகுதிகளில் அப்படி, தமிழ் ரத்தம் இல்லாத தமிழ் பொய்மைகள் அபேட்சகர்களாக போட்டியிடுகிறார்கள். இவர்கள் சிங்களவர்களேயன்றி தமிழர்கள் அல்ல. இவர்களைத் தரதரதியடிப்பதற்கு உண்மையான தமிழர்கள் தகுந்த நடவடிக்கை எடுத்துக்கொள்ள வேண்டும். இப்படியான சிங்களவர்களை நிந்தனைபண்ணி எத்தனையோ பிரசாரக்கூட்டங்களை நடத்தியிருக்கிறார்கள்.

செப்டம்பர் மாதம் 4-ம்தேதி பின்னேரம் (யாழ்ப்பாண சதொகுதித் தேர்தல் நிகழ்ந்த தினம்) அவர் (பொன்னம்பலம்) அவருடைய சகாக்களுக்கு ஒரு சொற்பொழிவாற்றப் போய், "என்னுடைய எதிரி (மகாதேவா) தேர்தலில் வெற்றியடைந்தால், எல்லாச் சிங்களவர்களையும் அடித்து உதைத்து யாழ்ப்பாணத்திலிருந்து துரத்திவிட வேண்டும். அதற்கு விருப்பமுள்ளவர்கள் கைகளைத் தூக்கி தம் சம்மதத்தைத் தெரிவிக்க வேண்டும்" என்று கூறினார். அச்சமயம் அவருடைய ஆதரவாளர்கள் தம் கரங்களைத் தூக்கி கரகோஷம்செய்து ஆர்ப்பரித்தார்கள். அதாவது சிங்களவர்களை யாழ்ப்பாணத்திலிருந்து துரத்துவதற்கு சம்மதமளித்தார்கள். அவர் (திரு பொன்னம்பலம்) சொன்னபடியே சிங்களவர்களைத் தலைமையாகக் கொண்ட யூ. என் பி. சமசமாஜம் ஆகியவற்றை யாழ்ப்பாணத்திலிருந்து துடைத்து விட்டார்.

வட்டுக் கோட்டை வெற்றியின் பொழுது, கையாளவேண்டிய எல்லாசாட்டைகளையும் சிங்களவர்களுக்கு எதிராக உபயோகித்தார்கள். இப்படி சிங்கள சமூகத்துக்கு எதிராகச் செய்ய வேண்டிய இயக்கங்களையும் கிளர்ச்சிகளையும் நடத்திச் செல்வதற்கு திரு. பொன்னம்பலத்திற்கு ஆதரவு கொடுப்பவர்கள் யார்? சிங்களவர்களை யாழ்ப்பாணத்திலிருந்து துரத்தியடிப்பதற்கு சம்மதம் கொடுத்து கையுயர்த்தி ஆர்ப்பாட்டம் செய்பவர்கள் யாவர்? கொழும்பு, காலி, கண்டி, நீர்கொழும்பு ஆகிய சிறிய பெரிய நகரங்களிலும், சிங்கள நாட்டுக் கிராமங்களிலும் வாடகைவைத்து சாராயம் - புகையிலை விற்கும் வியாபாரிகளே! சிங்களவனின் துட்டுக்காசை தட்டிப்பறிக்கும் சகலவிதமான சூழ்ச்சிகளையும் கையாண்டு சிங்களவனின் உதவியைப் பெற்று யாழ்ப்பாணத்தைகுபேரநாடாகச்செய்ய முயற்சிக்கிறபுகையிலை-சுருட்டு முதலாளிகளே சிங்கள நாடுகளில் நேசப்பான்மையையும் நல்லெண்ணத்தையும் காட்டி விட்டு, தம் நாட்டுக்கு (யாழ்ப்பாணத்திற்கு) வந்தபின் சிங்களவனை நாசமாக்க வழிபார்க்கும் துர்ஜன வியாபாரிகளே.

ஆனபடியால், சிங்கள ரத்தத்தினால் வளர்க்கப்பட்ட சாதியபிமானமுடைய சகல சிங்களவனும், அவர்களின் சுருட்டையும் புகையிலையையும் பகிஷ்கரிக்கவேண்டிய அவசியத்தை உணரவேண்டும் சிங்கள நாடுகளில பயிர் செய்யப்படும் புகையிலையையும் அதனால் செய்யப்படும் சுருட்டுகளையுமே பாவிக்கவேண்டும். இவற்றை உடனடியாகச் செய்யவேண்டியது அவசியம். அவை மாதத்திரமல்ல; அவர்களின் கடைகளிலிருந்து பொருட்கள் வாங்குவதையும், அவர்களோடு செய்யும் கொடுக்கல் வாங்கல்களையும் முற்றாகவே நிறுத்திவிட வேண்டியது உடனே செய்ய வேண்டியதாகும்.

மட்டுக்குமிஞ்சி சிங்களவர்கள், இவர்களுக்குச் செய்யும் உபசார உபசாரங்களையும் உடனே நிறுத்திவிட வேண்டும் தமிழர்களின் பொருட்களை வாங்குவதும், அவர்களோடு கொடுக்கல் வாங்கல் செய்தலும் சிங்கள சமூகத்திற்கே சிங்களவன் செய்யும் துரோகமாகும். யாழ்ப்பாணத்திலிருக்கும் சிங்கள வியாபாரிகளை தரத்திவிடுவதற்கு முயற்சி செய்கிற இவர்களுக்கும் இவர்களின் தலைவரான திரு பொன்னம்பலத்திற்கும் சொல்லுவதாவது, சிங்கள நாட்டிலிருந்து இவர்கள் போனபின்பு எங்களுடைய மனிதர்கள் தம் நாட்டிற்கு உடனே வருவார்கள் என்பது தான்.

கடைசியாகச் சொல்லுவதென்னவென்றால், "பிறந்த தமிழனையும், இறந்த தமிழனையும், படத்திலிருக்கிற தமிழனையும் விட வேறு எந்த தமிழனையும் நம்பவே முடியாது" என்று காலஞ் சென்ற திரு. பியதாச சிரிசேன சொல்லியிருப்பதை ஒவ்வொரு சிங்களவனும் நன்குணரவேண்டும்.

---

## 3 தினுசு சுதந்திர தபால் ஸ்டாம்புகள்

### இந்திய சர்க்கார் வெளியிடும்

புதுடில்லி, அக். 28

இந்தியா சுதந்திரம் பெற்றதை குறிக்கும் ஞாபகார்த்த தபால் ஸ்டாம்புகளை வெளியிட இந்திய சர்க்கார் முடிவு செய்துருக்கின்றனர். உள்நாட்டிலே உபயோகிக்க 1 அணா 6 பைசா ஸ்டாம்புகளும் சர்வதேச போக்கு வரத்துக்கு 3 அணா 6 பைசா ஸ்டாம்புகளும், விமான தபால் சர்விஸுக்கு 12 அணா ஸ்டாம்புகளும் வெளியிடப்படும். இந்த டாம்புகள் பொது மக்களுக்கு நவம்பர் மாத கடைசியில் கிடைக்கும் இந்த ஸ்டாம்புகளில் "மூன்று சிங்கங்கள் தாங்கி நிற்கும் அசோகர்ஸ் தூபிக்குப்" 'அசோக சக்கரம்' "ஜெ ஹிந்த்" ஆகியசின்னங்கள் முறையே இந்த ஸ்டாம்புகளில் பொறிக்கப்பட்டிருக்கும்.

---

## ஆப்கான் மன்னருடன் ஸ்ரீ ஜின்னாவின் தூதர் பேட்டி

பெஷாவர், அக். 24

ஜனாப். ஜின்னாவின் விசேஷ தூதரான நவாப் ஸதா சாதுல்லாகான் 27உ ஆப்கான் மன்னரை பேட்டி கண்டார்.

ஆசிரியருக்குக் கடிதம்

## பச்சோந்தி பிரதிநிதிகள்!

ஐயா,

இலங்கை 'பார்லிமெண்ட்' தேர்தலின் பின் "பல்டி" அடித்த சில அங்கத்தவர்களைப் பற்றி இப்பொழுது நடைபெற்றுவரும் சர்ச்சை பத்திரிகை படிக்கும் யாவரும் அறிந்ததே. பொது மக்களாகிய நாம் மேற்படி 'கட்சிமாறி'களின் விஷயத்தில் மிகவும் ஜாக்கிரதையாக இருக்கவேண்டியது மிக மிக அவசியம் அவர்களைப் பற்றி நாம் அறிந்துகொண்டவைகளை உடனுக்குடன் பத்திரிகை வாயிலாக பொது மக்களுக்கு அறிவித்து ஜாக்கிரதைப்படுத்த வேண்டியது இலங்கை வாழும் ஒவ்வொரு மக்களின் தலையாய கடமையாகும். இன்றைய மறுமுறையும் இந்த கட்சி மாறும் கூட்டம் யூ. என். பி. பிணக்கார குடும்ப ஆட்சியை நிலை நிறுத்த வாக்காளர்களாகிய எங்களை தந்திரமாக ஏமாற்றி பலி கொடுத்துவிடும். சத்திய சந்தர்களாகிய இவர்களின் பேச்சில் எவ்வளவோ முரண்பாடுகள் உள. 1946 அக்டோபர் 2-ம் தேதி காந்தி ஜயந்தி கொண்டாட வேண்டி அனுராதபுரம் வவேதானந்த சபையில் ஒரு பொதுக்கூட்டம் நடந்தது, அக்கூட்டத்தில் பேச வந்தவர்களில் தற்போது கலகுடாபரதி நியாக இருக்கும் திரு வி. நல்லையாவும் ஒருவர். திரு. நல்லையா காந்திஜியின் மகத்துவத்தைப் பற்றி இரண்டொரு வார்த்தைகள சொல்லிவிட்டு ஆரம்பித்தாரே பார்ககலாம்! சோலபரி பிரபுவையும் அவர் நமக்களித்திருக்கும் ஆப்பிலாச் சகடு போன்ற அரசியல் திட்டத்தையும் அவருக்காதரவளித்த சேனநாயகக்கூட்டத்தாலரையும் வெளுத்துக் கட்டிவிட்டார். அவர் பேசிய இரண்டொரு வார்த்தைகள என்-அல்ல-அக்கூட்டத்திற்கு விஜயம் செய்திருந்த அனபர்களின் காதுகளில இனனும் ஒலித்துககொண்டிருக்கின்றது. "சோலபரி எனனும் வெளியன் வந்ததும், இந்த நாயககாகூட்டததார் அவனுக்கு மாலை போட்டு வரவேறறார்கள். கார்களில் ஏற்றிககொண்டு ஹோட்டலில் போய்குடித்தார்கள். கூத்தாடினார்கள. அதுமாதரியாக, அவர்களுக்கு சாதகமான அரசியலை அவன சிறுபான்மையோரின் எதிர்பையும் பொருட்படுத்தாமல தயாரித்துக் கொடுத்து விட்டான். தமிழ் களாகிய நாம இந்த சோலபரிதிட்டத்தை ஏற்றுக் கொள்ளவே கூடாது. அத்திட்டததை ஆழக்குழிதோண்டிப் புதைத்து விட வேண்டும்....." என்று வீருப்புடன் பேசிய திரு நல்லையா இன்று ஏனோ அதை மறந்து காரியம் செய்யத துணிந்தாரா. "அன்று நான் பேசியதை நினைவல் யாரேனவது திருகப் போகிறார்" என்றாண்ணம் போலும! இன்று யூ என் பிக்கு பச்சத்துணையாகப் போய்ச் சேர்ந்துருக்கிறார். அவரைப் போலவே மன்னார் பிரதிநிதி திரு. சிறறம்பலம் அவர்களும தான் செயத நவஞ்சகச் செயலை மறைக்க யூ என் பியின் தினசரி ஒன்றின வாயிலாக 'தலையைச்சுற்றி மூக்கை' காட்டுகிறார். தான் ஜீ ஜீ யோடு ஒத்துழைத்தே தீயரும்! அப்படி ஒத்துழைத்தீராவடில் இந்த மந்திரி பதவி எங்கிருந்து கிடைக்கப் போகிறது? அப்போ செயதது தவறு இப்போ செய்வது சரியானது தானோ? இப்படி 'பல்டி' அடிப்பவர்களுககு சரி தவறு என்றும் ஒன்று இருக்கிறதா? அதை விட்டு திரு. சுந்தரலிங்கத்தை எடுத்துகொள்ளுவோம். தேர்தல் முடிவு தெரிந்ததும், "நான வகுட்புவாதக காங்கிரஸில் சேரப்போவதில்லை. ஆனால் யூ என். பியுடனும்சேரமாட்டேன்' என்று சொல்லிவிட்டு, தாங்கள ஒரு புதிய கட்சியைக் கூட்டப் போவதாக நடித்தார். டேராசிரியர் அல்லவா? கொஞ்சம் தந்தரம் தெரியாமலா போய் விடும்! அதையிடடுத்தானே "காங்கிரஸில் சேரமாட்டேன்" என்றார். காங்கிரஸில் சேவதாகச் சொன்னால சேனநாயககா கிட்டவும வரமாட்டார் என்பது தெரியும். அப்போ பதவி எங்கிருந்து கிட்டும்? "புதிய கட்சி என்றாம், தம் கடசிக்கு உள்ள பலககுறைவை சரிக்கட்ட, சேனநாயக்கா தன்னிடம் வரவே செய்வார். அப்பொழுது பெரிதாகப் பார்த்து ஒன்றைத் தட்டிக்கொள்ளுவோம்" என்ற எண்ணததோடு தனது நடிப்பை தொடாந்து நடித்து வந்தார். பார்த்தார் சேனநாயக்கா! வந்தது ஆபத்து! இதை "இப்படியே விட்டுவிட்டால், நமமபாடு மோசம" என்று, சுந்தரலிங்கததின் பக்கம் தன் பார்வையைச் செலுத்தினார். "சிறு பாயபானாலும் பெரிய கம்பால் அடி" என்பதறகிணங்க, கொடுத்தார் ஒரு நிரந்தர ஐந்துவருட மந்திரி உத்தியோகதவதை! நடிப்பும பலன் பெற்றுவிட்டது. பார்த்தீர்களா? இதுதான் உலகம்! மேற்சொன்ன, காட்டிககொடுக்கும "பல்டி" கூட்டததார் இலலாவிட்டால் இன்று யூ என். பியை புதைத்த இடததில் பெரிய ஆலவிருடசம் வளர்ந்திருக்குமே! ஆகையால், சிலரது ஆடசி இம்முறை ஸதிரமாகலாம். ஆனால் மறுமுறை எங்கே போவார்கள? "அறுபதடி கம்பத்தில் ஏறி ஆடினாலும் கீழே வந்துதானே யாசகம் வாங்கவேண்டும்" அப்போ பொதுமக்களாகிய நாம் மேற்குறிதத புல்லுருவக் கூட்டத்திற்கு நல்லதொருபாடம் படிப்பிக்கவேண்டும் அந்த ஸதானகத்திற்கு, உண்மை ஊழியர்களைத் தெரிந்தெடுக்கவேண்டும், அப்போதான் நமது செய்கை நமக்கும் நாட்டிற்கும நன்மை பயக்கும்.

இப்படிக்கு,
க. மெய்யழகன்
யாழ்ப்பாணச்சந்தி,
அனுராதபுரம்
20-10-47

---

## மைசூர் சமஸ்தான சுதந்திர விழா

### ஜனப் பிரதிநிதிகள் மந்திரி சபை அமைத்தனர்

பெங்களூர், அக். 24

மைசூர் மஹாராஜா, திவான் தவிர, பிரதம மந்திரியையும மற்றும் எட்டு மந்தாகளையும, மந்திரி சபைக்கு நியமித்திருப்பதாக, மைசூர் வசேஷ கெஜட் அறிவிக்கிறது.

புதிய மந்திரிகளின் பெயர்கள் வருமாறு:-

ஸ்ரீ செங்கல்வராய ரெட்டி (பிரதம மந்தரி) எச் ஸி தாசப்பா, கே டி. பாஷயம் ஐயங்கார், எச். ஸித்தய்யா, டி. மாரியப்பா, செனனிராமையா, முகமது ஷரீப், டி. எச். சந்தர சேகரய்யா, ஸ்ரீ சுப்பராம செட்டி.

இந்த வைபவத்தை சுதந்திர தினமாக மைசூர் சமஸதானம பூராவிலும மகக்ள் கொண்டாடுகின்றனர்.

திவானும், பிரதம நீதிபதியும் மைசூரில இருப்பதால இனறு மந்தரிகள் வசுவாசப் பிரமாணம் எடுத்துககொள்ளவில்லை. அநேகமாக அடுத்த வாரம எடுததுக் கொளவார்கள்.

---

## அமெரிக்க சினிமா படங்களை பகிஷ்கரியுங்கள்

### பிரெஞ்சு கமியூனிஸ்ட் பத்திரிகை பிரசாரம்

பாரிஸ், அக் 24

பாசிசம், வகுப்புத்துவேஷம், மது மயக்க லீலாவிநோதம், கொடுமை, கொள்ளை, போக்கிரிததனம், மட்டிததனம், நல்லுணர்ச்சியற்ற நடவஞ்சகம் எலலாம் நிறைந்த அமெரிக்காவில் உற்பததியாகும் சினிமாப் படங்களை பகிஷ்கரிக்கும்படி பிரெஞ்சு கமியூனிஸ்ட் பத்திரிகையான 'ஹ்யூமனைட்' டில் ஒரு முழுப் பகக்ம் ஒரு கட்டுரை பிரசுரிக்கப்பட்டிருக்கிறது.

---

## "அரபுநாடுகள், இந்தியா ஐக்கிய முனனணி"

பாக்தாத், அக். 24

எதிர்கால ஆக்ரமிப்பிலிருந்து மத்திய கிழகையும முஸலிம நாடுகளையும பாதுகாததுக் கொள்ள அரபு நாடுகள், துருக்கி பெர்ஸியா, இந்தியா, பாக்கிஸதான் ஆப்கானிஸதான் ஆகிய நாடுகள் கொண்ட "கிழக்கு முன்னணி' ஒன்றை அமைக்கலாம் என்று இங்கு அரசியல் வட்டாரங்களில பேசிக்கொள்ளப்படுகிறது.

---

## அமெரிக்க, பிரிட்டிஷ் சூழ்ச்சியே காரணம்

### இந்தியா-பாக்கிஸ்தான் தகராறு

### சோவியத் ரஷியா கருத்து

மாஸகோ, அக். 24

மாஸகோ ரேடியோ விமரசகர் பின் வருமாறு தெரிவித்தார்:- அமெரிக்காவும் பிரிட்டனும் இந்திய பொருளாதார அரசியல் விஷயங்களில் தங்கள ஆதிக்கத்தை நிலைநாட்டச் செய்து வரும் சூழ்ச்சிகளின் காரணமாகவே இந்தியாவுக்கும் பாக்கிஸதானுக்கும் தகராறுகள் ஏற்பட்டு வருகின்றன பிரிடடிஷ ஏகாதிபத்தியததின் பிரித்தாளும் தந்திரத்தால வகுக்கப்பட்ட மவுண்ட் பேட்டன் திட்டத்தின் பயனாகவே இந்தியாவில் இவ்வித தொல்லைகள் ஏற்பட்டு வருகின்றன வென்பதை இப்பொழுது பிரிட்டனின் நிர்வாகத்தை நடத்திவரும் கோஷ்டியைச் சேர்ந்த பலர் அபிப்பிராயப்படுகிறார்கள்.

---

## வீட்டில் சுருக்கிட்டுத் தொங்கிய பணிப்பெண்

மாத்தறை, அக். 25

மாத்தறை உதவி சர்க்கார் ஏஜண்ட் திரு எம். இராஜேந்திரா என்பவர் வீட்டில் வேலை செய்யும் எச். சோபியா என்னும் பணிப்பெண் வீட்டில் உள்ள ஒரு அறையில் தறகொலை செய்து கொள்ள முயற்சிததாக கூறப்படுகிறது. இதனைக் கண்ட வேறு ஒரு பணியாள் தகவல மற்றவர்களுக்குத் தெரிவிததது மேல் எதலத்துக்கு பலர் உதவிக்கு வந்து பெண் தற்கொலை செய்து கொள்வதைத் தடுக்க, அப்பெண் கழுத்தில் சுருக்கிட்டிருந்த கயிற்றைவெட்டினர். போலிசாருக்குத் தகவல் கொடுக்கப்பட்ட துடன் பணிப்பெண்ணை ஆஸ்பத்திரிக்கு அப்புறப்படுத்தினர்.

இதே வீட்டில் உள்ள வேறு ஒரு இளம் பணியாளுடன் இப்பெண் நேசமாக இருந்ததாகவும், திடீரென மூன்று நாளில் தான் திரும்புவதாகக் கூறி ஒரு கடிததத்தை திரு. ராஜேந்திராவுக்கு எழுதி வைத்துவிடு அந்தப் பணியாள் வெளியேறியிருந்ததாகவும் இதனால்தனக்கு அப்பணியாள் துரோகம்செய்து விட்டதாக எண்ணி பெண் தற்கொலை செய்ய முயன்றதாகவும் கூறப்பட்டது. பணிப் பெண்ணின் நிலைமை அபாயகரமாக இருப்பதால் எதுவித வாக்குமூலமும் அப்பெண்ணிடமிருந்து பெறமுடியவில்லை என்று கூறப்படுகிறது.

---

## பிரதமர் அட்லி ஹாலந்து செல்வார்

ஹேக், அக். 24

பிரிட்டிஷ் பிரதமர் கிருகிளெமென்ட் அட்லி, ஸ்ரீமதி அட்லி ஆகியோர் டச்சு அரசாங்க அனுமதியை ஏற்று வால்சொன் தீவில் நவம்பர் 4-ம் தேதி நடக்கவிருக்கும் 'புனரமைப்புத்தினத' தில்சமுகமாய் இருப்பார்கள்.

அன்று பின்னேரம் ஹேக் நகரில் நடைபெறும் ஓர் விருந்திலும் அவர்கள் கலந்து கொள்வார்கள். இவ்விருந்தை அரசாங்கமே நடத்துகிறது.

(ராய்ட்டர்)

---

## விஸ்கி முதலாளி மரணம்

பெர்த், (ஸ்காட்லந்து) அக். 24

தேவார் விஸகி என்னும் ஸ்காச் விஸகி உற்பத்தி கம்பெனி முதலாளியான ஜான் தேவார் என்றலார்டு போர்ட்வியட் இன்று இங்கு காலமானார். (ராய்ட்டர்)

---

## சிகரெட், புகையிலை, மதுவகைமோட்டார்கார்

### பர்மாவில் இறக்குமதித் தடை

பர்மா, அக். 25

பர்மா சர்க்கார் சுதந்திரம் அடைவதையொட்டி பொருளாதார நிலையைச் சமாளிக்க இறக்குமதிக் கட்டுப்பாட்டுச் சட்டம் விதித்திருகின்றனர். அதன்படி சிகரெட், புகையிலை, மதுவகை, மோட்டார் கார் முதலிய பல சுகபோக சாமான்களின் இறக்குமதியை அறவே தடுத்திருகிறார்கள் [ராய்ட்டர்

---

## ஐக்ய பண்டகசாலையில் சீனி களவு

திரிகோணமலை, அக். 25

திரிகோணமலை உப்பு வெளியைச் சேர்ந்த ஐக்கிய பண்டகசாலையில் திருடர் முகட்டைப் பிரித்து உட்புகுந்து ஒன்றரை மூடை சீனியைக்களவாடி விட்டதாகப் போலிசாருக்கு அறிவிக்கப்பட்டுள்ளது. (ந-நி)

---


திருமணம்

நிகழும் சர்வஜித்கு ஆடு ஐப்பசி மாதம் 10-உ தேதி (27-10-47) பிற்பகல் 3 மணியளவில் வருங்கும்ப இலக்கின சுப முகூர்த்தத்தில் எனது புத்திரி

திருவளர் செல்வி புனிதவதி அம்மாளுக்கும்
திரு. வே. சின்னத்தம்பி அவர்களின் புத்திரன்
திருவளர் செல்வன் சிவசாமி அவர்களுக்கும்

திருமணஞ் செய்துவைக்கப் பெரியோர்கள் நிச்சயித்திருப்பதால் அந்தணர் எனது அன்பர்களும் சுற்றந்தவர்களும் குடும்ப சமேதராய் சமூகந்தந்து தம்பதிகளை வாழ்த்தியேகுமாறு வேண்டுகின்றேன்.

க. விசுவலிங்கம்.

[பருத்தியடைப்பு, இரண வைத்தியர்]

தாராக்குளம் ரோட். யாழ்ப்பாணம்.



கதம்பைக் கயிறு

கிந்தொட்டை கதம்பைக் கயிறுகளும் தும்பால் செய்யப்பட்ட சாமான்களும் நேரிலோ தபால் மூலமோ பெற்றுக்கொள்ளலாம் ஆர்டர்களுக்கு தேவையான சாமான்கள் குறித்த நேரத்தில் செய்து கொடுக்கப்படும்.

நேடா கயிறு, கம்பை, வடம், ஈக்கில்தடி, தும்புத்தடி, கயிற்றுப்பாய், காப்பற், கால்மிதி

இவ்விடம் குறைந்த விலையில் வேண்டிய தினுசுகளில் பெற்றுக்கொள்ளலாம்.

இத்தோடு கிறம் லங்கா பிராண்ட் வினுகரியும், கை பேக்ஸ்களும் கிடைக்கும்.

மொத்த வியாபாரிகளுக்கும் சில்லறை வியாபாரிகளுக்கும் விசேஷ சலுகை உண்டு

விலை விபரங்களுக்கு எழுதுங்கள்.

A. Abdul Kalyoom,
Coir Ropes
Manufacturer at Gintota,
No 44, Wolfendahl Street,
Colombo.

ஏ. அப்துல் கையூம்,
44, ஆதிருப்பள்ளித்தெரு,
கொழும்பு.
கயிற்றுத் தொழிற்சாலை,
கிந்தொட்டை.



அற்புதமானது! ஆனந்தமளிப்பது!!

மனதிற்கு பரவசமும் உல்லாசமும் ஊட்டுவது

இப்படியாக பாலர் முதல் பெரியோர்வரை ஏகோபித்து புகழ்வதெல்லாம்

மேனகா மார்க் லொசிஞ்சர்களே!

மேனகா மார்க் லசிஞ்சர்கள் ஒவ்வொன்றிலும் தேகத்திற்கு வலிமை அளிக்க வல்லதும், இரத்த விருத்தியுண்டாக்குவதுமான குளுக்கோஸ் எனும் சத்து சேர்ந்திருக்கிறது அத்துடன் மனதிற்கு நல்மணமும். நற்சுவையும் கொடுக்கக்கூடிய பழரசச் சத்தும் சேர்ந்து இதற்கென்றே இந்தியாவிலிருந்து தருவிக்கப்பட்ட நிபுணர்களைக்கொண்டு சாஸ்திரமுறைப்படி தயாரித்து யாவருக்கும் எளிதில் கிடைக்கக்கூடிய விதத்தில் சரசமான விலையில் டின்களில் அடைத்து விற்கப்படுகின்றது.

மேனகா மார்க் லொசிஞ்சர்

எல்லா முக்கியவியாபாரிகளிடமும் கிடைக்கும்

தயாரிப்பாளர்கள்:-

ராஜா இன்டஸ்ரியல் வேர்க்ஸ்,
71, புதிய சோனகத் தெரு, கொழும்பு.
Telegram: "SWEETS" Telephone: 2737

கீழ்க்காணும் வியாபாரிகளை நமது முக்கிய விநியோகஸதர்களாக நியமித்திருக்கிறோம்.

V. T. செல்லையா அன் கோ, குருநாகல்
K. முருகேசு அன் கோ, " "
மனோன்மணி ஸ்டோர், கேகாலை Kegalle.
W. E. M. பாக்ஷா சாகிப் அன் கோ, நாவலப்பிட்டி
N. B. அந்திரிஸ சில்வா அன் கோ, கம்பளை
M. சேகு அலி ராவுததர் அன் கோ, வத்துகாமம்
A. S. M. முகைதீன் அன் கோ, மாத்தளை
M. T. செல்லையா அன் கோ, கெக்கிராவ
K. சிவகுநாதப்பிள்ளை அன் சன்ஸ், யட்டியாந்தோட்டை
S. நாகமுத்து, ருவான்வெளை.


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## பர்மா - பிரிட்டன் ஒப்பந்தம்

### தொடர்பை பலப்படுத்துவதாக பர்மா பிரதமர் கூறுகிறார்

ரங்கூன், அக் 26

ஆங்கிலோ - பர்மிய உடன்படிக்கை விவாதங்கள் இரு நாடுகளையும் நெருங்கியதொடர்புகளை ஏற்படுத்தக்கூடிய முறையில் நடந்துள்ளதாகவும் பர்மிய தூதுக்கோஷ்டியினை சுமார் 90 சதவிகித கோரிக்கைகளையும் பிரிட்டன் எதுவிதமான விவாதமுமின்றி ஏற்றுக்கொண்டதெனவும் பிரதமர் தக்கினு தெரிவித்தார். திங்கட்கிழமை காலை 10 மணிக்கு இந்த ஒப்பந்தத்திலுள்ள விஷயங்களை பிரிட்டனிலும் பர்மாவிலும் ஒரே நேரத்தில் வெளியிடப்படுமென்று கூறப்பட்டது. பிரிட்டிஷ பத்திரிகையாளர்கள் தூதுக்கோஷ்டியொன்று அடுத்த வருடம் பர்மா செல்லும் என்றும் தெரிவிக்கப்பட்டது.

(ராய்ட்டர்)

## பிரிட்டனில் இடதுசாரிகள் பலம் அதிகரிக்கவேண்டும்

(1-ம் பக்கத் தொடர்ச்சி)

டுத்த பாலஸ்தீனம் சென்றிருந்தார்.

**நடிகை கொலையா?**

சௌதாம்டன், அக், 27

கேப்டவுனிலிருந்து இங்கு வந்து சேர்ந்த டர்பன்கேஸில் என்ற கப்பலில் போலிஸார் புகுந்து அதிலிருந்த ஒருவரை விசாரணை செய்வதற்காகக் கைது செய்துகொண்டு போனார்கள் ஜோஹன்னஸ்பர்க்கில் நடைபெற்ற "தங்கச்சிறகன்" என்ற நாடகத்தில் முவ்டிச் சண்டை போட்டி வீரனான எரிக்பூன் என்பவருடன் நடித்த நடிகையான 21-வயதுள்ள மிலஜிட்டன் அந்தக் கப்பலில் பிரயாணம் செய்தாள் கப்பல் பிரயாணத்தில் அவளைக் காணவில்லை. அவள் இருந்த அறையில் ரத்தக் கறையுள்ள துணிகளிருந்தன. அத்துணிகளையும் ரத்தக்கறையிருந்த அறைக் கதவையும் போலீஸார் எடுத்துச் சென்றார்கள் அவளை யாரோ கொன்று ஜன்னல் வழியாக கடலில் எறிந்திருக்கக் கூடுமென்று யூகிக்கப்படுகிறது.

## மால்டாவில் பெண்கள் வாக்களிப்பு

### தீவின் சரித்திரத்தில் முதன் முறையாக நடக்கிறது

வலெட்டா, அக் 26

புதிய அரசியல் சட்டத்தினை மேற்கொண்டு மால்டாவில் நேற்று தேர்தல்கள் நடந்தபோது ஆங்குள்ள பெண்கள் வாக்களிக்கும் இடங்களுக்குச் சென்று வாக்களித்தனர் இத்தீவின் சரித்திரத்தில் பெண்கள் வாக்களிப்பது இதுவே முதன் முறையாகும். 21 வயதுக்கு மேற்பட்ட எல்லோருக்கும் வாக்களிக்கும் உரிமை வழங்கப்படுகிறது தேர்தல் இன்றும் நாளையும் தொடர்ந்து நடக்கும்.

[ராய்ட்டர்]

## பிரதிநிதிகள் சபை ஸ்பீக்கர் வாசஸ்தலம்

கொழும்பு, அக் 26

இலங்கை பிரதிநிதிகள் சபை சபாநாயகர் (ஸ்பீக்கர்) வாசஸ்தலமாக பம்பலப்பிட்டி-கொள்ளுப்பிட்டிக்கு இடையிலுள்ள "மும்தாஜ் மஹால்" என்னும் பங்களா எடுக்கப்பட்டுள்ளது.

## இளவரசிக்கு பர்மாவின் பரிசு

ரங்கூன், அக். 26

இளவரசி எலிஸபெத் திருமணத்துக்கு பர்மாவின் மேல் பகுதியிலுள்ள மொகோக் அரசாங்கங்களில் அகப்படும் பிரசித்திபெற்ற கற்கள் பதித்த ஒரு கழுத்தணியை பரிசாக கொடுக்க பர்மா தீர்மானித்துள்ளதாக நேற்று தெரிவிக்கப்பட்டது. (ராய்ட்டர்)

# இலவசப் பால் விநியோக ஸ்தலங்களால் பயனில்லை

## கிராமாபிவிருத்திக்குப் புதிய திட்டம்

### வட பகுதி பொருளாதார நிலைபற்றிய புள்ளிவிபரம் சேகரிப்பு

கொழும்பு, அக் 27

**புள்ளி விபர இலாகா அதிகாரிகள் சிலர் சென்ற சில மாதங்களாக வட பகுதியின் பொருளாதார நிலைமையை அளவிட்டனர். அவர்களின் அறிக்கையை அடுத்த வாரத்துக்கடையில் அரசாங்கப் பொருளாக்க ஆலோசனையாளருக்கு சமர்ப்பிக்கும்படி கேட்கப்பட்டிருக்கிறதாக அறியப்படுகிறது**

உள்நாட்டு இலாகா கிராமாபிவிருத்தி மந்திரியாகிய ஸர். ஒலிவர் குணதிலகக்கா கிராமாபிவிருத்திக்கான வேலைகளுக்கு ஓர் புதிய திட்டம் போட்டிருப்பதாக அறியப்படுகிறது.

இலங்கையில் காடடுப்புற கிராமங்களிலுள்ள மக்கள் எவ்வித கஷ்டமான நிலையில் வாழ்ந்து வருகிறார்கள் என்பதை இவ்வதிகாரிகளின் அறிக்கை தெரிவிக்கின்றதெனப் பேசப்படுகிறது. போக்கு வரத்தின்றி நாகரீகமற்று வாழ்க்கைக்கு வேண்டிய பொருட்களின்றி ஆதிகால மக்கள் போன்றே வாழ்கிறார்களென்று அதிகாரிகள் அறிக்கையில் கூறப்பட்டிருக்கிறதாம்.

அதிகாரிகள் பரிசீலனை செய்தபொழுது அரசாங்கத்தால் ஏற்படுத்தப்பட்ட கிராமாபிவிருத்தி தலங்கள் இலவசப் பால் விநியோக ஸ்தலங்கள் ஆகியவற்றால் கிராம மக்களுக்கு ஒரு பயனும் கிடைக்கவில்லையென்பதாகத் தெரிந்துள்ளதாம்.

இலவசப் பால் விநியோக ஸ்தலங்கள் இதுவரை நடத்தப்படாத ஒரு "தெம்மாடிக் கூத்தாகவே" இருக்கின்றதாக அவ்வதிகாரிகள் அபிப்பிராயப்படுகிறார்களாம் யாருக்கு அப்பால் விநியோகிக்கப்பட வேண்டுமோ அவர்களுக்கு அது கிடைப்பதில்லையாம்.

இலவசப் பால் விநியோகிப்பவர்களுக்கும், கள்ள மார்க்கட்காரர்களுக்கும்தான் இலவசப் பால் விநியோகத் திட்டத்தால் பயனுண்டு என விவரிக்கப்பட்டிருக்கின்றதாம்.

## பழத்தோட்டக்காரர் சங்க 13-வது வருடாந்தக் கூட்டம்

கொழும்பு அக் 27

இலங்கை பழத் தோட்டக்காரர்கள் சங்கத்தின் 13-வது வருடாந்தக் கூட்டம் திரு. டி. எஸ். சேனநாயக்கா தலைமையில் நடைபெற்றது. தேகநிலை காரணமாக கவர்னர் இக்கூட்டத்துக்குச் சமுகமளிக்கவில்லை ஸ்ரீமதி மூர் பிரசன்னமாகியிருந்தார், திரு சேனநாயக்கா பிரதமராக நியமிக்கப்பட்டதைப் பாராட்டிக் கூட்டத்தில் பேசப்பட்டது. திரு. சேனநாயகா பேசுகையில் இலங்கைமக்களில் தமக்கு அதிக நம்பிக்கை இருப்பதாகவும் அவர்கள் சரியானதையே செய்வார்கள் என்று தமக்குத் தெரியுமென்றும் கூறினார்.

## இந்தோ - பாக்கிஸ்தான் ஐக்கிய முன்னணி

### வகுப்பு ஒற்றுமையே லட்சியம்

லண்டன், அக் 26

பிரிட்டனில் உள்ள இந்திய-பாக்கிஸ்தான் பிரஜைகள் புதிதாக அரசியல் கலப்பின்றி ஆரம்பிக்கப்பட்டுள்ள இந்தோ-பாக்கிஸ்தான் ஐக்கிய முன்னணியில் சேரும்படி அழைக்கப்பட்டுள்ளனர். இரு டொமினியன்களிலுமுள்ள பல சாகியக்காரர்களுக்குமிடையில் நெருங்கிய ஒற்றுமையை ஏற்படுத்துவதே இந்த ஸ்தாபனத்தின் லட்சியமாகும்.

## மீன்பிடி தொழிலுக்கு அரசாங்கம் கொடுத்த கடன்

### 10 லட்சம் திரும்ப பெற வேண்டும்

கொழும்பு, அக். 26

மீன்பிடி தொழிலுக்கு சர்க்கார் தனிப்பட்டவர்களுக்கும் ஸ்தாபனங்களுக்கும் கடனாகக் கொடுத்த 10 லட்சம் ரூபாயுக்கு மேல வெளியில் இருப்பதாகக் கூறப்படுகிறது இந்தப் பணத்தை எவ்விதம் மீண்டும் பெறுவது என்பதுபற்றி மந்திரி திரு. ஜி. ஈ டி. சில்வா ஆலோசித்து வருவதாக அறியப்படுகிறது.

## லாரியை நிறுத்திக் கொள்ளையிட முயற்சி

### கார் டிரைவருக்கு ரிமாண்டு

கொழும்பு, அக் 25

அத்திடியா என்னுமிடத்திலமரமத்து இலாகா லாரியொன்றைத் தடுத்து அதில் கொண்டு செல்லப்பட்ட பணத்தை கொள்ளையடிக்க முயன்றது சம்பந்தமாக கொழும்பு செற்கு மாஜிஸ்டிரேட் கோர்ட்டில் சைமன் டி சில்வா ஜெயசிங்கா என்னும் [ஹஹிவளை வாசி] ஒருகார் டிரைவர் மீது குற்றச்சாட்டி அவரை ரிமாண்டில் வைக்கும்படி போலீஸ் இன்ஸ்பெக்டர் எல் டபிள்யூ ஜேஸப் விண்ணப்பித்தார். மாஜிஸ்டிரேட் அவரை 31-ம் தேதிவரை ரிமாண்டில் வைக்கும்படி உத்தரவிட்டார்.

## இந்தோ-சீனத்தில் பிரெஞ்சுத் தாக்குதல்

செய்கோன், அக், 24

பிரஞ்சுத் துருப்புகள் வடவொங்கிங்கிலிருந்து அங்குள்ள இரு நகரங்களைக் கைப்பற்றியதாக பிரெஞ்சு ராணுவ அறிக்கை கூறுகிறது

இந்தோ-சீனக் குடியரசுப் படையினர் பல கிராமங்களைத் தாக்கியதாகவும் அத்தாக்குதல்கள் முறியடிக்கப்பட்டதாகவும் பிரஞ்சுப் அறிக்கை தெரிவிக்கிறது.

# காஷ்மீருக்குள் பாக்கிஸ்தானியர் பிரவேசம்

## மகாராஜாவுக்கு ஜனாப் ஜின்னா எச்சரிக்கை

### ஜுனாகத் கிராமங்களை போட்டி சர்க்கார் கைப்பற்றினர்

### பட்டாணிஸ்தானுக்கு இப்பி பக்கிரி ஆதரவு

புதுடில்லி, அக் 26

இப்பொழுது டில்லியிலிருக்கும் காஷ்மீர் சமஸ்தான உபவிப் பிரதம மந்திரி நேற்றிரவு பின் வருமாறு தெரிவித்தார்:-

வடமேற்கு எல்லைப்புற மாகாணத்திலுள்ள மன்சேஹ்ரா ஜில்லாவிலிருந்து அபிரிதிபலை ஜாதியினரும் ரஜாவிலுள்ள பாக்கிஸ்தான் ராணுவ வீரர்களும் கொள்ளைக்கூட்டத்தாரும் நவீன ஆயுதங்களுடன் நூற்றாலொறிகளில் வந்து வியாழக்கிழமையன்று காஷ்மீர் சமஸ்தானத்தில் புகுந்தனர்

மொத்தம் 2000 பேர்கள் இவ்விதம் பிரவேசித்ததாக அகில இந்திய ரேடியோ தெரிவிக்கிறது. இந்திய சர்க்கார் சமஸ்தான மந்திரி காரியாலயம் காஷ்மீரில் நிலைமை சமாளிக்கப்பட்டு நிர்வாகம் சரிவர நடைபெறுவதாகத் தெரிவிக்கிறது

பெரும் பகுதியான இடங்களில் தங்கள் ஆட்சியை நிறுவிவிட்டதாக காஷ்மீர் போட்டி சர்க்கார் அறிவிக்கிறது.

### ஜனாப் ஜின்னா தந்தி

கராச்சி, அக் 26

பாக்கிஸ்தான் கவர்னர் ஜெனரல் ஜனாப் ஜின்னா காஷ்மீர் மன்னருக்கு அனுப்பிய தந்தி இன்று வெளியிடப்பட்டது அதில் அவர் முஸ்லிம் பெரும்பான்மையுடைய காஷ்மீரை ஆளும் ஹிந்து மன்னர் ஹரிசிங், காஷ்மீரை இந்தியாவுடன் இணைக்க சதிசெய்வதாகக் குற்றஞ்சாட்டியிருக்கிறார். மன்னர் தனது பிரதம மந்திரியை கராச்சிக்கு அனுப்பி சமரசப் பேச்சு நடத்தும்படியும், வெளியார் உதவியை நாடுவது படமுறுத்தலுக்குச் சமானமாகுமென்றும், மகாராஜா முஸ்லிம்களை அடக்கிவருவதாகத் தெரிகிறதென்றும், இந்திய யூனியனில் சேர சதிசெய்வதாகவும் ஜனாப் ஜின்னா தெரிவித்திருக்கிறார்.

### விமான மூலம் சாமான்கள்

புதுடில்லி, அக் 25

ஸ்ரீநகருக்கு (காஷ்மீர் தலைநகர்) டில்லியிலிருந்து விமானம் மூலமாக சாமான்கள் அனுப்ப இந்திய சர்க்கார் வசதிகள் ஏற்படுத்திக் கொடுத்துப்பதாகத் தெரிகிறது. இப்பொழுது அங்கு ஏற்பட்டுள்ள பொருளாதார நெருக்கடியைத் தீர்ப்பதில் காஷ்மீருக்கு உதவி செய்வதே இதன் நோக்கம்

மேற்கு பஞ்சாபில் ஏற்பட்டுள்ள வகுப்பு கலகம் காரணமாக பொருளாதார முற்றுகை ஏற்படலாம் என்பதும் அதன் காரணமாக காஷ்மீர் மக்களுக்கு அன்றாட அசியாவசியப் பொருள் வந்துசேரவல்லையென்றும் அறிவிக்கப்பட்டது ஞாபகமிருக்கலாம்.

### ஜுனாத் சமஸ்தானம்

பம்பாய், அக். 25

ஜுனாகத் சமஸ்தான போட்டி சர்க்கார் ஜுனாகத் சமஸ்தானத்தைச் சேர்ந்த 12 கிராமங்களைக் கைப்பற்றினர், அங்குள்ள சமஸ்தான சொத்துக்களைக் கைப்பற்றி சமஸ்தான அதிகாரிகளையும் கைதுசெய்தனர்.

### பட்டாணிஸ்தானுக்கு இப்பி பக்கிரி ஆதரவு

பெஷாவர், அக். 24

பட்டாணிஸ்தான் ஏற்படுவதற்கு இப்பி பக்கிரியும் ஆதரவு கொடுக்கிறார். இன்று நேற்று இஸ்லாமிய காலேஜ் மாணவர் கூட்டமொன்றில் எல்லை பிரதமர் கான் அப்துல் கையூம் கான் பிரஸ்தாபித்ததலமான நடவடிக்கை எடுக்கப்படுமென்று மிரட்டினார்.

### இந்திய முஸ்லிம்களின் எதிர்காலம்

புதுடில்லி, அக். 24

ஜம்மு அஸ்ஸிதில் 5 ஆயிரம் முஸ்லிம்கள் அடங்கிய கூட்டத்தை பௌலானா அபுல்கலாம் ஆஸாத் சேசுகையில் இனிமேல் லீக் அரசியலுக்கு இந்தியாவில் இடமில்லையென்று வற்புறுத்தினார்.

அவர் மேலும் கூறியதாவது:-"பிரிவினையின் விளைவுகளான கஷ்டங்களையே இந்தியா இப்பொழுது அனுபவிக்கிறது. நிலைமை மாறியிருப்பதற்கு ஏற்றபடி முஸ்லிம்கள் தங்கள் கொள்கையை மாற்றிக்கொள்ள வேண்டும். இதை சகல முஸ்லிம் தலைவர்களும் உணருகிறார்கள் புது கொள்கையை நிணயிக்க முஸ்லிம் தலைவர்கள் மகாநாடு அடுத்த மாதம் கூடுகிறது."


கிரவுன் தியேட்டர் ள்கின்னர்ஸ் ரோடு மருதானை

இன்று காண்பிக்கப்படுவது! புத்தம் புதிய படம்!!

தினசரி மாலை 6-15 இரவு 9-30

சனியும்-ஞாயிறும் மெட்னி 3 மணிக்கு

சுவர்ணலதா-நஸீர் திறபட நடிக்கும்

வாமிக்-அஷ்ரா

என்னும் உன்னத ஹிந்தி பேசும் படம் காண்பிக்கப்படும்

சனி-ஞாயிறு மெட்னியில் பெண்களுக்கும், பிள்ளைகளுக்கும் பால்கனிக்கும் 1-ம் வகுப்புக்கும் அரைச் சார்ஜ்

முன் இடம் தேடுங்கள்!


## பாடசாலைகளில் கைத்தொழில் பயிற்சி வகுப்புகள்

### கல்வி டைரக்டரின் சுற்றறிக்கை

கொழும்பு, அக். 27

அடுத்தவருட ஆரம்பம் முதல் எல்லா ஆங்கில பாடசாலைகளிலும் கைத்தொழில் பயிற்சி முறையை உயர்தர வகுப்புகளுக்கும் அமுல் நடத்த கல்வி இலாகா தீர்மானித்துள்ளது, இக்கிட்டத்தை விளக்கும் ஒரு சுற்றறிக்கையை கல்வி டைரக்டர் டாக்டர் ஐ சான்டிமன் எல்லாப் பாடசாலைகளுக்கும் அனுப்பியுள்ளார் அதில் திட்டத்தை விளக்கிக் கூறியிருப்பதுடன் மாணவர்களை கைத்தொழில் வகுப்புகளுக்கு வலோற்காரமாக புகுத்தாது மாணவர்களுடைய விருப்பத்தின்மேல் இதில் சேரக்கூடியதாகச் செய்ய வேண்டுமென்றும், கைத்தொழில் பயிற்சியில் ஈடுபடும் மாணவர்கள் அரைப் பங்கு நேரத்தை படிப்பிலும் அரைப்பங்கு நேரத்தை கைத்தொழில் பயிற்சியிலும் செலவு செய்ய வேண்டுமென்றும் பாடசாலைகள் கையாள வேண்டிய கைத்தொழில்கள் பற்றியும் குறிப்பிட்டுள்ளார். மேலும் கைத்தொழில் பயிற்சிகள் சமந்தமாக பெற்றோரது விருப்பங்களையும் அறிந்தே செய்ய வேண்டுமென்றும் தெரிவித்துள்ளார்

## ரஷியாவை அழிக்க துருக்கியின் கனவு

### ஐக்கிய தேச அரசியல் கமிட்டியில் குற்றச் சாட்டுகள்

நியூயார்க், அக். 25

யுத்த காலத்தில் ரஷியாவு துருக்கியும் ஜெர்மனியின் உதவியைக்கொண்டு ஒருவர் பிரதேசத்தை மற்றவர் பறித்துக் கொள்ள முயன்றதாக இன்றைய ஐக்கிய தேச அரசியல் கமிட்டிக் கூட்டவிவாதத்தில் ஒவ்வொருவரையொன்று குற்றஞ்சாட்டின யுத்தவெறியைத் தூண்டிவிடுபவர்களை அடக்கவேண்டுமென்று ரஷியா கொண்டுவந்த தீர்மானத்தின் மீது ரஷியப் பிரதிநிதி பேசியபோது துருக்கி அரசியல வாதிகள் யுத்த காலத்தில் ஜெர்மனியின் உதவியைக் கொண்டு ரஷியப் பிரதேசங்களைச் சேர்த்துக்கொள்ள முயன்றதாகவும் அங்காராவில் ஜெர்மன் எத்னிகராக இருந்த வான்பேபேன் அறிக்கையில் இதற்கு ருசு இருக்கிறதென்றும் ரஷியாவை அழிக்க துருக்கி நூற்றாண்டு காலமாக கனவு கண்டு வருகிறதென்றும் தெரிவித்தார்.

துருக்கிப் பிரதிநிதி, துருக்கிப் பிரதேசத்தை ரஷியாவுடன் சேர்க்க ஜெர்மனியிலிருந்து சோவியத் தலைவர்கள் ஹிட்லர் உதவியை நாடியதற்கு அத்தாட்சி இருப்பதாகக் கூறினார். ஆஸ்திரேலியா, எகிப்து, சீன பிரதிநிதிகள் தீர்மானத்தின் மீது பேசியபின் கூட்டம் நாளைக்கு ஒதுக்கி வைக்கப்பட்டது இன்னும் 12 பிரதிநிதிகள் பேசவிருக்கின்றனர்.

[ராய்ட்டர்]

## 'உங்கள் நேசன்'

தமிழ் விருத்திப் போட்டி நிர். 7-ன் விடை விமர்சனம்

பெரிய பரிசைப் பெற அரிய தருணம்!!

விலை சதம் 25. :: முடிவு தேதி 14-11 47

வேண்டியோர் 3 சத ஸ்டாம்புகள் 9 அனுப்பிப் பெற்றுக்கொள்க.

உங்கள் நேசன் காரியாலயம்,

22, புதிய சோனகத்தெரு, கொழும்பு.

## பண்டைப் பெருமை வாய்ந்த பழம் பெரும் இனம்

[2-ம் பக்கத் தொடர்ச்சி]

ஆச்சிப்பிலேகி ஆகியனவெல்லாம் இந்த ஈழ தேசத்தைச் சேர்ந்தனவாகும்.

இத் தேசத்தாரில் மாலைதீவு மக்கள் முகம்மதியராயும் இலங்கையர் சிங்களவராயும் பௌத்தராயும் மலாய் ஆச்சிப்பிலக்கோவில் சிலர் இந்துக்களாயும் பலர் முகம்மதியராயுமிருக்கிறார்கள். இலங்கையின் பூர்வீக தொடர்புகளுக்கு குறிகளாய் கதிர்காமம், முனீஸ்வரம், மாந்தோட்டை, திருக்கேஸ்வரம், திரிகோணமலை என்னும் மூர்கள் தேவாரங்களிலும் பாடல்களிலும் பாடப்பட்டு இலங்கைக்கும் தமிழ் நாட்டுக்கும் தமிழ் பாஷைக்கும் ஒளியும் அழியாத தமையும் கொடுக்கிற சைவ சமயத்துக்கும் அத்திவாரமாக அமைக்கப்பட்டிருக்கிறது.

இந்தத் தமிழர்கள் எந்த மானிட பிரிவுக்கு சேர்ந்தவர்கள் என்றவினாவுக்கு விடை கொடுப்போம். முதலாவது நிறத்தளவில் பிரிவுகள் அமைக்கிறது பொருந்தாது ஏனெனில் நிறம், வருணம் தேச சுவாதந்தியத்தோடு அண்டினதாகும். வெள்ளைக்காரர் உஷ்ண தேசத்திலடியேறினால் வெண்மை குறைந்து வேறு நிறம் அடைகிறார்கள், மேலும் நான் கவனித்திருக்கிறேன். யாழ்ப்பாண தமிழர் பர்மா, மலேயா சென்றால் ஐந்தாயிரம் வண்ணமும் அவர்கள் முகமும் நிறமுமுள்ளவர்களாயிருக்க, வளர வளர அல்லது யாழ்ப்பாணம் திரும்பி வரதங்கள் தமிழ்க் குறிகள் கொள்வார்கள். ஆனபடியால் நிறம் மானிட பிரிவுக்கு ஓர் அடையாளமல்ல. இன்றைக்கு திருவனந்தபுரத்தில் யூதர்களுண்டு. இவர்கள் கறுப்பு நிறம் உள்ளவர் ஆனபடியால் இவர்கள் கறுத்த அல்லது காப்பிரிப் பிரிவுக்கு சேர்ந்தவரல்ல. அப்படியே பாஷைத் தொடர்பால் அல்லது பாஷைப்பிரிவால் மானிட வர்க்கத்தைப் பிரிக்க முடியாது. பிற ஏகாதிபத்தியங்களுக்கு அடிமைப்பட்டு அல்லது பிறபாஷையால் ஓதும் சமயங்களை ஏற்று பிறகலைகள் கல்விகள் ஏற்கிறதால் மானிட வர்க்கமானது. உதாரணமாக சமஸ்கிருதம் தற்காலங்களில் தென் இந்திய ஆலயங்கள் ஆராதனைகளிலும் வேதமோதுகிறதிலும் உபயோகிக்கப்படுகிறது. ஆனபடியால் தென் இந்தியர் ஆரியருக்குச் சேர்ந்தவர்களல்ல அதேமாதிரியாக சமஸ்கிருதத்தில் வேறுமுறையான ஓர் பாஷை பாளி பௌத்த நூல்கள் இப்பாஷையில் கூறப்பட்டதால் இலங்கையிலும், பர்மாவிலும் சியாமிலும் ஆலயங்களில் பாளி உபயோகிக்கப்படுகிறது. ஆனபடியால் இக்காரணமொன்றால் இத்தேசத்தார் பாளி பாஷை உற்பத்தியான மானிட பிரிவுக்கு சேர்ந்தவரல்ல.

கடசியாய் ஆரியர் திராவிடர் எனறால் என்ன? ஆரியனும் திராவிடனும் சமப்பிரிவோ அல்லது ஓர் பெரிய பிரிவின் கிளைப்பிரிவோ அல்லது ஆரியர் ஓர் பெரிய பிரிவும் திராவிடன் ஓர் கிளைப்பிரிவோ நாமறியோம்.

ஆரியர் என்ற சொல் நான் அறிந்தபடி ஓர் நுணணிய அல்லது விசேஷம் என்று கருத்துள்ள சொல். அதை சனப்பரிவுக்கு குறிப்பாக்கியது கிறிஸ்துவின் பின் 19-ம் நூற்றாண்டில் தான். ஹிட்லர் ஜெர்மானியர் மட்டும் தான் ஆரியர் என்று கூறினார் யூதர்களை அழித்து வந்தார். எப்படியும் தமிழரிலும் பழமையுள்ள சாதி சனம் சீனாவில் தோன்றலாம் தமிழரென்றால் யூதர்களோடு அசிரியர், பபிலோனியர் எகிப்தியர் மெஸோபியர் திரண்ட ஒரு ஜாதியாராயிருக்கலாம் பழமையுள்ள ஜாதியென்று பெருமை கொண்டும் தமிழர் ஒழுக்கத்திலும் கடவுள் வழிபாட்டிலும் திறமையுள்ளவராய் வாழ கடவுள் விதிப்பாராக.

## டச்சு-இந்தோனேஷிய தகராறு

### குடியரசுத் தலைநகருக்கு மூவர் கமிஷன விஜயம்

பட்டேவியா, அக். 26

டச்சு-இந்தோனேஷிய தகராறுகளைத் தீர்த்து சமரஸம் செய்து வைக்க மூன்று நாடுகளது சமாதானக் கமிஷன் இந்தோனேஷிய குடியரசுத் தலைநகரான ஜோக்ஜகர்த்தாவிலே இந்தோனேஷியருடன் பேச்சுவார்த்தை நடத்த சம்மதித்துள்ளதாக நப்பகதகுந்த இடத்திலிருந்து அறிவிப்பப்படுகிறது. இக் கமிஷன் ஆஸ்ரேலியாவில் இருந்து இங்கு கிழமைப்பட்டேவியா வந்துசேரும் இக் கமிஷன்பட்டேவியாவுக்குவந்ததும் குடியரசு ரேடியோவில் இவர்களுக்கு விடுக்கும் வரவேற்புப் பேசசில் இந்த தகராறுகளைக் கூடியவரை திட்டமாக முடிவு செய்துவிடும்படி கேட்டுக் கொள்ளப்படுமென்று அறியப்படுகிறது.

குடியரசு மந்திரி சபையில் மாற்றங்கள் செய்து விரிவான தேசிய மனப்பான்மையின் அடிப்படையில் புதிய மந்திரி சபையை அமைப்பதற்கு இந்தோனேஷிய குடியரசு முஸ்லிம் கட்சியின் தீர்மானத்தை அதன் பிரதிநிதி அங்கீகரித்துள்ளதாக கூறப்படுகிறது. 25,000-ற் கதிகமான முஸ்லிம்கள் அடங்கிய பிரார்த்தனைக் கூட்டமொன்றில் டாக்டர் ஐ. ஆர் சொகர்னோ பேசுகையில் இன்னும் சில தினங்களில் மந்திரி சபையில் மாற்றங்கள் ஏற்படுமென்று எதிர்பார்க்கப்படுவதாகக் கூறினார். (ராய்ட்டர்)

சிலோன் நியூஸ் பேப்பர்ஸ் லிமிட்டெட்டிற்காக 1947-ம் வரு அக்டோபர் மீ 27உ இந்த பத்திரிகை 194A, தட்டாரத் தெரு, கொழும்பு, சுதந்திரன் அச்சுக் கூடத்தில் அச்சிட்டு கொழும்பு, மெயின் ஸ்டிரீட்டில் இருக்கும் சிங்காரம் நடராசா அவர்களால் வெளியிடப்பெறுவது.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org